அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 25 | ஜூன் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054

சந்ததி மறவாச் சரித்திரம்

## 1981 ஜூன் 1

## தமிழ் பௌத்தம்




## தொல்லியல் திணைக்களத்தின் கபடத்தனமான செயற்பாடு

## நூலகத்துடன் எரிந்துபோனது என் கனவு

பொழில்



# நூலகத்துடன் எரிந்துபோனது என் கனவு

பிறப்பிலேயே ஒரு
புத்தகப்புழு நான்.
கூட்டுப் புழுவாகப் பரிணமித்து
பட்டாம்பூச்சியாக
சிறகடிக்க
எனக்கொரு வளமாக
ஆசியாவின் மிகப்பெரும்
நூலகம்
கைகொடுக்கும் - என்ற
கனவுடன் நானிருந்தேன்.

காலை வெயிலில்
தகதகவென மின்னும்
வெண் கட்டடம்
எனது கனவு மாளிகை.

உள்ளே
திகட்டாத
கல்விச் செல்வத்தை
அள்ளித் தரும்
இலட்சக்கணக்கான
புத்தகச் செல்வங்கள்
ஒரு நாள்
இதோ
இந்த இளைஞர் யுவதிகள்
போல
எனது தேடலும் இங்கிருக்கும்.
இது எனது நீண்டகால ஆசை.

கட்டடத்தை
தினம் தரிசிக்கும்
ஆவல் எனக்கு
சுப்பிரமணிய பூங்காவிற்கு
நாளும் போக அடம்பிடிக்கும்
வேட்கை
படிப்பகத்தைப் பார்க்கத்தான்
என்பது
என் பெற்றோர்க்கும் புரியும்.

நூல்களுடன் என் கனவுகளும்
எரியூட்டப்படும் என்று நான்
கண்டுகொண்ட நாள்
31/05/1981.
கதறித் துடித்தது தமிழினம்!
வீடிழந்தபோது வருந்தாத
எம் மக்கள்
நூலிழந்தபோது
நொந்து போயினர்!

தமிழன் இழந்தது என்ன
என்பது
அந்தச் சின்ன வயதிலும்
என் உள்ளத்தில் உறைந்தது!

கயவன் அந்த
காமினி திஸ்ஸநாயக்க.
தீவைப்பின் பின்னால்
இந்த
தீயவன் இருந்தான்.

கொன்றனர் கொழுத்தினர்
வேர்விட்ட நிலத்திலிருந்து
விரட்டி விரட்டி
அடித்துத் துரத்தினர்!
படிப்பையும் பிடுங்கி,
சித்தத்தை சிதறடித்து,
வரலாற்றை அழிக்கவும்
வம்சத்தைச் சிதைக்கவும்
காடையர் இனவெறியர்.
ஏந்திய தீயில்
கரிக்கட்டையாகி
காணாமல் போனது
யாழ் பொதுநூலகம்.

மீளக் கட்டலாம் கட்டடத்தை
அரிய நூல்கள்
அழிந்து போயினவே
மீண்டு வருமா?
வருடா வருடம்
வடுவாக மனதில் பதிந்து
வரலாறாகிய
தீவைப்பு நாள் வந்தால்
சிந்தை கலங்கும்!!

மனிதம் தொலைத்த
நரமாமிச வெறியர்
இன்றும் எங்கள்
வாழ்வைச் சிதைக்கிறார்.
அறுகுபோல் வேரோடி
பரந்து படர்ந்து
ஒன்றாய் வாழ்வதே
எமக்குப் பலம்.
புயலிலும் சுழலிலும்
தாக்குப் பிடித்து
ஆழ வேரோடி
அழிவைத் தவிர்ப்போம்!
தடைகளைத் தகர்ப்போம்!!

**(யாழ் பொது நூலகம் எரிப்பு நாள் நினைவாக எழுதப்பட்டது)**

மாத இதழ் | மணம்: 25
ஜூன்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| கொடூரத்தின் உச்சம்... | 06 |
| வட, கிழக்கில் 'இனவாத'... | 09 |
| வடக்கையும்... | 12 |
| இலங்கையில் தமிழ்.... | 14 |
| தொல்லியல்... | 17 |
| இலங்கையில் கொல்லப்படும்.... | 20 |
| ரயில் பயணத்தின் (கவிதை)... | 22 |
| வையகம் எழுச்சியுற... | 23 |
| வாழ்க்கை... | 26 |
| ஆபத்துகள்.... | 27 |
| சந்ததி மறவாச் சரித்திரம்.... | 30 |
| சிறுவர்... | 32 |
| காலத்தின் தேவை... | 34 |
| ஹலோ நண்பா!! (கவிதை)... | 36 |
| இந்தோனேசியா... | 37 |
| பாடம்.... | 40 |
| வலை (தொடர் கதை).... | 41 |




## திருக்குறள்

**குறள் 117:**

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"

**விளக்க உரை:**

நடுவுநிலைமை நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு எனக் கொள்ளாது உலகு.












மே மாதம் என்றாலே மனம் ரணமாக வலிக்கத் தொடங்கிவிடும்.

எத்தனை வருடங்கள் கடந்தால் என்ன, உலகின் எந்த முலையில் இருந்தால் என்ன வலி வலிதான்.

மாலினியின் கவிதை என்னை 2009 இற்கு மீண்டும் கொண்டு சென்றுவிட்டது.

ஆசிரியரின் கருத்துக்கள் அருமை. அந்தந்த சமயத்துக்கு ஏற்றவாறு பதிவிடுவது சிறப்பு. பாராட்டுகள்.

**-மகேஸ்வரன் கந்தையா (ஜேர்மனி)**

இறந்தவர்களுக்கு அஞ்சலி செய்வதற்கும் தடைசெய்யும் சிங்கள அரசு ஹிட்லர் ஆட்சியை விடவும் மோசமானது. ஐ.நாவும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இழுத்தடிப்பதுதான் மனவேதனை.

எங்கள் தலைமை மீள எழுவதுதான் எங்களுக்கு ஒரு தீர்வைத் தரும். மனவலியும்,கஞ்சியின் சுவையும், மரண ஓலங்களும், குண்டுச் சத்தங்களும் இன்றுதான் நடந்ததுபோல கண்முன்னே தெரிகின்றன.

எல்லாமே மறக்கடிக்கப்படும் இந்த நேரத்தில் 'எழுநிலம்' போர்கால இதழ்போல நல்ல விடயங்களைத் தாங்கி வருவது மனதிற்கு ஒரு ஆறுதல். உங்கள் சேவை தொடரட்டும்.

**-விநோதா சங்கர் (சிக்காகோ, அமெரிக்கா)**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் இத்தனையாயிரம் தமிழர்களைக் கொன்றொழித்தும் அவர்களின் இனவெறி இன்னும் அடங்கவில்லையே. எத்தனை வடிவங்களில் அட்டூழியம் செய்கிறார்கள்? கட்டுரைகள் முலம் இவற்றை வெளிக்கொணர்வதற்கு நன்றி. எல்லோரும் இவற்றை வாசிக்க வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறை. போராட்டம் நடைபெற்ற போது எல்லோருக்கும் எல்லா விடயங்களும் உடனுக்குடன் தெரிந்துவிடும். இப்போது அப்படியல்ல.

இளையவர்களுக்கு எங்கள் வரலாறும் இனவழிப்பின் வரலாறும் தெரியாது. ஏன், எதற்கு என்று தெரியாமலே சதியில் உள்வாங்கப்படுகிறார்கள். இந்தப் புத்தகம் உலகெங்கும் உள்ள தமிழ்மக்கள்கையில் கிடைக்க வழி செய்யுங்கள்.

**-வாசுகி கலையரசன் (பெல்ஜியம்)**




நல்ல தாய் கட்டுரை மிகவும் அருமையான பதிவு. யதார்த்தத்தை எவ்வளவு அழகாக சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்காக உயிர் நீத்தவர்களை நினைவு கூரவும் தடையா? என்ன கொடுமை. கவிதைகள் அருமை.

கட்டுரைகள் சிறப்பு. ஆனாலும் எனக்குப் பிடித்தது கதைதான். 'வலை' எங்கள் குடும்பத்தில் நடப்பது போல எவ்வளவு இயல்பாக போகிறது.கொற்றவைக்கு எனது பாராட்டுகள்.

**-கவிதரன் இரத்தினசிங்கம் பேர்மிங்காம், இங்கிலாந்து.**

ஐங்கரன் விக்னேஸ்வரா நல்ல நல்ல விடயங்களை கட்டுரையாகத் தருகிறார். மிக நல்ல முயற்சி. அவரது பணி தொடரட்டும். முல்லையின் கவிதை சிறப்பு. கவிதைகள் குறைவாக வருகின்றன. கவனிப்பீர்களா?கதை மிகவும் நன்றாகப் போகிறது. அடுத்த பத்திரிகை எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டுவதுதான் கதையின் வெற்றி.

**-சிவகுமார் சுந்தரலிங்கம், சுவிஸ்**

அரசியல், சமூக, பொருளாதார இதழ்

எழுநிலம்

உலக நாடுகளில் நடைபெறும் இனப்படுகொலைகள், போராட்டங்கள் தொடர்பான கட்டுரைகள் வருவது நன்று.

உண்மை திரிபு படுத்தப்பட்டு வருவதால் அநேகருக்கு உலக நாடுகளில் உண்மையாக என்ன நடைபெறுகிறது என்பது தெரியவர வாய்ப்பில்லை.

இப்படியான கட்டுரைகள் எமது மக்கள் மனதிலும் உத்வேகத்தை ஊட்ட உதவும். போராட்டமே தமிழர்க்கு தீர்வைத் தரும் தலைப்பே முடிவைச் சொல்லி விட்டது. சூப்பர்.

**-திலகவதி சக்திவேல் (ரொறன்ரோ, கனடா)**

இறந்தவர்களை நினைத்து அழுவதா இல்லை இருப்பவர்களை தினமும் சாகடிக்கிறார்களே என்று அழுவதா என்று தெரியவில்லை. எங்களுக்காக எத்தனையாயிரம் பேர் தம்மைக் கொடுத்தார்கள். இப்போ கஞ்சாவும் கசிப்புமாக நாடு சீர்கெட்டுக் கிடக்கிறது. போதையும், கொலைகளும் அடுத்து யாருக்கு என்ன நடக்கும் என்று தெரியவில்லை.

கொலை செய்துவிட்டு தற்கொலை என்று முடி விடுகிறார்கள். தாயகத்தின் பிரச்சனைகள் இப்போ நிறைய உங்கள் பத்திரிகையில்வெளி வருகின்றன. ஆனாலும் போதாது. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களைத் திரட்டி வெளியிடுங்கள்.

**-உண்மை விளம்பி, (மட்டுநகர்)**

மதத்தின் பெயரால் இனக்கருவறுப்பு சமீபகால இனவழிப்பின் வடிவத்தை சரியாகச் சொல்கிறது. முள்ளிவாய்க்கால் கவிதை மக்கள் மனங்களில் மாறா வடுவாகப் பதிந்திருக்கும் வேதனையைப் புலப்படுத்துகிறது. கதை அருமையாகப் போகிறது. நாட்டு நடப்போடு சேர்ந்து போவதால் புனைகதை போலவே தெரியவில்லை. குட்டிக்கதைகள், அறிவுரைகள் இடையிடை வருவது நன்று. இன்னுமொரு கதை போட்டால் என்ன? எப்படியிருக்கும்?

**-முகிலா மாதவன், ( பிரான்ஸ்)**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...

Ezhunilam.com

# கடன் மறுசீரமைப்பு தீர்வாகுமா? சிக்கலாகுமா?

## ஆசிரியர் பக்கம்

இலங்கையின் வரலாற்றில் இதுவரை காலமும் இல்லாதவாறு, தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு வங்கிகளுக்கு விடுமுறையும் பங்குச் சந்தை வர்த்தகத்திற்கு ஒரு நாள் மூடுவிழாவும்அறிவித்திருக்கிறது இலங்கை அரசு. இலங்கையின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்காகவே இந்த விடுமுறை என சனாதிபதி அறிவித்திருக்கிறார்.அண்மையில் பிரான்ஸ் பரிஸில் நடைபெற்ற 'உலகளாவிய நிதி ஒப்பந்தம்' தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டபோது, இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடனுதவிகளுக்கு ஐநாவின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று ஐநாவின் செயலாளர் நாயகத்திடம் பெற்ற உறுதிமொழி திரு ரணில் விக்கிரமசிங்கவின் இந்த உத்வேகத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

29/06/23 - 03/07/23 வரை வங்கிகளுக்கு விடுமுறை என்றும் 30/06/23 அன்று பங்குச்சந்தை மூட்டப்படும் என்றும் அரசு ஏற்கனவே அறிவித்துவிட்டது.திட்டம் புதன்னன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, சனி மற்றும் ஞாயிறில் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற நிகழ்ச்சி நிரலும் தயாராகி விட்ட நிலையில், கடன் மறுசீரமைப்பிற்கான பொறிமுறை மட்டும் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அப்படியொன்று இருப்பதாகவும் தெரியவில்லை.

கடந்த வருட இறுதியில் இலங்கை சுமார் 41,600 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனையும் சுமார் 42,100 மில்லியன் டொலர் உள்நாட்டுக் கடனையும் கொண்டிருந்தது. எந்த மீள் கட்டமைப்பும் செய்யாத நிலையில் மீண்டும் மீண்டும் கடன் வழங்கமாட்டோம் என்று IMF கைவிரித்து விட்டது. இதனால் நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றதும், பல்வேறு பிரயத்தனங்களின் பின் IMF விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதால் மறுபடி வெளிநாட்டுதவிகள் கிடைத்ததும் அனைவரும் அறிந்ததே.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் முக்கியமானது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செய்யவேண்டும். அதுவும் அரசுக்கு நட்டம் ஏற்படாதவாறு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தியாவினதும் சீனாவினதும் காலைப் பிடித்து அதனை ஓரளவுக்கு ஒப்பேற்றியாகி விட்டது. இதனால் மட்டும் இலங்கையின் பொருளாதாரத்தை சீர்செய்துவிட முடியாது, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பையும் செய்வது நல்லது என்று பரிந்துரையும் செய்துள்ளது IMF. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு IMF இன் நிபந்தனைகளில் இல்லை. இதனால், வரும் எந்த விளைவுகளுக்கும் IMF பொறுப்பாகாது. அடுத்த ஐந்து வருடங்களில் 17மில்லியன் அமெரிக்க கடனுதவி கிடைக்க வேண்டுமென்றால் இதனைச் செய்துதானாக வேண்டும் என்பதால் இலங்கை இந்த முடிவிற்கு வந்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு (Debt Restructuring) என்றால் என்ன?

வங்கியிடமிருந்து அல்லது ஒரு நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றால், மாதாந்த தவணை முறையில் வட்டியுடன் கடன் கழிக்கப்படும். கடனை மீளச் செலுத்தமுடியாத ஒரு நிலை வரும்போது வட்டியுடன் கடன்சுமை அதிகரித்துச் செல்லும். இந்த நிலையில் இருபகுதியினரும் கதைத்து, சில மாற்றங்களைக் கொண்டுவந்து கடனை மீளளிப்பது கடன் மறுசீரமைப்பு எனப்படும். இது

1. கடனில் ஒரு பகுதியை கட்ட வேண்டாம் என்று கழித்து விடுவது. (haircut method)
2. வட்டி வீதத்தைக் குறைப்பது.
3. கடன் கட்டி முடிக்கவேண்டிய தவணைக் காலத்தை நீடிப்பது.

அல்லது இந்த மூன்றையும் ஒருசேரச் செய்வது என்று ஒழுங்கு செய்யப்படும்.

இதைத்தான் இந்த ஐந்து நாட்களுக்குள் இலங்கை அரசு செய்யத் திட்டமிட்டிருக்கிறது. உள்நாட்டுக் கடன் என்பது திறைசேரி உண்டியலாகவும் பிணைமுறிகளாகவும் வங்கிகளிடம் அரசு கடன் பட்டிருக்கும். திறைசேரி உண்டியல் ஒரு வருடத்தினுள் மீளச் செலுத்தப்பட வேண்டும். தவறின் அது பிணைமுறியாக மாறிவிடும்.

வங்கிகளின் இலாபத்தின் 60% பிணைமுறிகள் மூலமே கிடைக்கின்றன. எனவே வட்டி வீதம் குறைக்கப்படும்போது அது நிச்சயமாக வங்கிகளின் கட்டமைப்பில் தாக்கத்தைக் கொண்டுவரும். பணவீக்கத்தினால் பணத்தின் பெறுமதி குறைந்துவிட்ட நிலையில் ஏற்கனவே ஏதோவொரு வகையில் வங்கிகள் மறுசீரமைப்புக்கு உள்ளாகியுள்ளன.

வங்கிகளிலுள்ள மக்களின் வைப்புகளைக் கொண்டுதான் திறைசேரி உண்டியலும், பிணைமுறிகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கொள்வனவு செய்யும்போது மக்களின் அனுமதியை வங்கிகள் கோருவதில்லை.

இப்போது கடன் மறுசீரமைப்பு செய்யும்போது,செயற்பாட்டு ரீதியாக வங்கிகள் நிச்சயம் தாக்கத்தைச் சந்திக்கும் என்கிறார் பொருளாதார நிறுவனமான 'அட்வகட்டா' வின் முகாமைத்துவப் பணிப்பாளர் தன்னாத் பெர்னாண்டோ. இதனால் முதலில் வங்கிகள் ஸ்திரத்தன்மையைப் பேணவேண்டும், பின்னர்தான் கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்கிறார் அவர்.

வங்கிகளில் இருப்பிலிடப்பட்ட மக்களின் பணத்துக்கும், சேமலாப நிதிகளிற்கும், ஓய்வூதியப் பணத்திற்கும் எந்தப் பிரச்சனையும் ஏற்படாது என்று மத்திய வங்கியின் ஆளுனரும், சனாதிபதியும் உத்தரவாதம் அளித்துள்ளார்கள். இவ்வளவு சிக்கல்கள் நிறைந்த ஒரு கசப்பான விடயம் எவ்வாறு நடந்து முடியப் போகிறது என்பது இன்னும் சில நாட்களுக்குள் தெரிய வந்துவிடும்.







பாரி

# கொடூரத்தின் உச்சம்

உலகின் மிகப் பெரிய மனிதப் புதைகுழி மெக்சிக்கோ நாட்டின் வெராக்ரூஸ் என்னும் துறைமுக நகரில் கண்டுபிடிக்கப் பட்டதாக உலகம் அஞ்சுகிறது. ஒரே குழியில் 250 இற்கும் மேற்பட்ட மனித உடலின் எச்சங்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். போதைப்பொருள் கடத்தல்காரர்களால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் உடல்கள் அவை என்கிறார்கள் அவர்கள்.

ஈராக் நாட்டிலும் 200 இற்கு மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை எல்லாவற்றிலுமாக 12,000 இற்கும் மேற்பட்ட சடலங்களின் எச்சங்கள், சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஐநா அறிக்கையொன்று கண்டனம் தெரிவிக்கிறது. சிரியாவின் சரித்திர நகரான பல்மைராவிலும் 40 இற்கு மேற்பட்ட அப்பாவிகளின் மனித எச்சங்கள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் தனது கடுமையான கண்டனத்தைப் பதிவிட்டுள்ளது. லிபியாவிலும் இவ்வாறான எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டனவாம்.

இவற்றிற்கு அங்கு நடைபெற்ற போராட்ட அமைப்புகளும், முந்தைய ஆட்சியாளர்களுமே காரணமாகச் சொல்லப்படுகிறது. இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். மேற்குலகிற்கும் அமெரிக்காவிற்கும் இவர்களைப் பிடிக்காது. தாங்கள் அங்கு படையெடுத்துச் சென்றதால் வந்த அழிவுகள் எப்போதும் இந்த உலகில் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. இந்த இடங்களைத் தோண்டித் துருவி துப்புத் துலக்கும் ஐநாவின் பார்வையில் தமிழர் தாயகப் பரப்பில் ஆதாரத்துடன் காட்டப்பட்ட மனிதப் புதைகுழிகள் புலப்படுவது அரிதாகவே உள்ளது. அப்படி எட்டினாலும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கோ தயக்கம் காட்டுகிறது.

யாழ் மாவட்டத்தில் செம்மணி, மிருசுவில், துரையப்பா விளையாட்டரங்கு போன்ற இடங்களிலும் கிளிநொச்சி கணேசபுரத்திலும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிலும் மன்னார் மாவட்டம் திருக்கேதீஸ்வரம் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தமிழர் தரப்பை உலுக்கிய நிகழ்வுகள். காணாமல் ஆக்கப் பட்டோரின் நிலை இன்றுவரை தெரியாத நிலையில், கண்டுபிடிக்கப்படாத எத்தனையோ புதைகுழிகள் தமிழர் தாயகப் பரப்பில் இருக்கக்கூடும் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு எப்போதும் உண்டு.

யாழ் செம்மணியில் கிரிசாந்திக்கும் அவரைத் தேடிச்சென்றவர்களுக்கும் என்ன நடந்தது என்பது தமிழர் மனங்களில் ஆழப்பதிந்து துயர வடுவாக என்றும் நிலைத்திருக்கும் ஒரு நிகழ்வு.

**திரு யோகேஸ்வரன் எனும் அப்பாவி பொதுமகன் தனது கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் தயா கட்டடத்தில் உள்ள முகாம் படையினர் அவரைக் கைதுசெய்தனர். அடுத்த நாள் 'சி' வதைமுகாமுக்கு கொண்டு சென்றனர். இந்த முகாம் கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார்**





கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தது.

திரு யோகேஸ்வரன் அவர்களை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அந்த முகாமுக்கு எடுத்துச் சென்றேன். அங்கு அவர் தலைகீழாகக் கட்டப்பட்டிருந்தார். பிளேட்டினால் அவரது உடலில் வெட்டிக் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். இலங்கை இராணுவ அதிகாரிகளான கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெப்டினன்ட் துடுகல்ல, உதயமார ஆகியேரே இந்தச் சித்திரவதையை செய்துகொண்டிருந்தனர்.

அந்த முகாமில் தடுப்பில் இருந்த பெயர் தெரியாத நபர் ஒருவரைக் கூட பொல்லால் தாக்கி கொலை செய்து அங்குள்ள வீடு ஒன்றில் முன்னால் புதைத்தார்கள். அதே காலத்தில் ஒரு முன்னிரவு காலத்தில் கப்டன் லலித் ஹோவகேயும், அப்துல் நஷார் ஹமீத்தும் இளம் தம்பதியினரைக் கைது செய்தனர். அவர்களை முதலில் ‘சி’ சித்திரவதை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் இருவரையும் செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். அவ்வாறு அவர்களைக் கூட்டிச் செல்லும்போது மண்வெட்டியை எடுத்துவரும்படி என்னிடமும், ஏ.எஸ் பெரேராவிடமும் கப்டன் லலித் ஹேவகே தெரிவித்தார். அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டு சென்றோம். நான் செல்லும்போது கப்டன் ஹேவகே அந்தப் பெண்ணுடன் தனிமையில் நிற்பதைக் கண்டேன். அச்சமயம் அந்தப் பெண்ணின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் கணவன் இருக்கும் இடத்துக்குப் பெண்ணை அழைத்து வந்தனர். என்னிடம் இருக்கின்ற மண்வெட்டியை வாங்கிய கப்டன் ஹேவகே இருவரின் தலையிலும் அடித்தார்.

அவருடன் இருந்த அப்துல் நஸார், ஹமீத், சமரசிங்க ஆகியோர் பொல்லுகளால் அவர்களைத் தாக்கினர். இருவரும் கீழே விழுந்து விட்டனர். இருவரின் சடலங்களையும் எம்மைப் புதைக்கும்படி கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் திரு செல்வரத்தினம் என்பவரைக் கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தன, லெப்டினன்ட், துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைது செய்து ‘சி’ பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர்.

அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள், என்னிடம் கேட்டனர். அவர்களின் கோரிக்கையின் பேரில் திரு செல்வரத்தினம் அவர்களை விடுவிக்குமாறு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா ஆகியோரிடம் கோரினேன்.

அவரை விடுவிப்பதாக சொன்ன அவர்கள் அன்று இரவே அவரைக் கொலை செய்து விட்டார்கள். மறுநாள் நான் போனபோது அங்கு 10 இற்கு மேற்பட்ட சடலங்கள் கிடந்தன. இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அரியாலையைச் சேர்ந்த பார்த்தீபன், சுதாகரன் என்ற இரு இளைஞர்கள் கைதடி சென்று வியாபாரம் செய்ய பாஸ் பெற்றுத் தருமாறு என்னிடம் கேட்டார்கள்.

இது குறித்து கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனாவிடம் கேட்டேன். அவர்களை முகாமுக்கு வருமாறும், அங்கு வைத்து பாஸ் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் தகவலை அந்த இளைஞர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் முகாமுக்கு சென்றனர்.

மறுநாள் அந்த இளைஞர்களின் உறவினர்கள், அந்த இளைஞர்கள் இருவரும் இன்னும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை என்று என்னிடம் தெரிவித்தனர் அந்த இளைஞர்களுக்கு. கைதடியில் வியாபாரஞ் செய்ய அனுமதிக் கடிதம் வழங்குவதாகத் தெரிவித்த கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெட்டினன்ட் துடுகல்ல ஆகியோர் அந்த இளைஞர்கள் இருவரையும் தலைகீழாகக் கட்டித் தூக்கிவிட்டுத் தாக்கியதைக் கண்டேன்.

மறுநாள் இரு இளைஞர்களும் இறந்துவிட்டனர். நான் கடமைக்கு வர முன்பே அந்த பகுதியில் அங்கு 50 பேர் காணாமல் போயிருந்தனர் என்று அறிந்தேன். வழமையாக உயர் அதிகாரிகள் பொதுமக்களை சித்தரவதை செய்து கொலை செய்துவிட்டு சடலத்தைப் புதைக்கும்படி என்னிடம் தருவார்கள்.

செம்மணி மற்றும் பகுதிகளில் உள்ள 10 மனிதப் புதைகுழி இடங்களை நான் அடையாளம் காட்டுவேன். ஏ.எம். பெரேரா ஐந்து இடங்களைக் காட்ட இருக்கின்றார். அதில் ஒன்றில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன.

இவற்றை நான் சொல்லவில்லை. கிரிசாந்தி படுகொலைக் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச என்னும் அதிகாரி நீதிமன்றில் கொடுத்த நீண்ட ஒப்புதல் வாக்குமூலம் இது. செம்மணியில் நடைபற்ற கொடூரமான சித்திரவதைகள், பதைபதைக்க வைக்கும் படுகொலைகள் தொடர்பாக இந்த இராணுவ அதிகாரி நீதிமன்றில் நேருக்கு நேர் நின்று கொடுத்த வாக்குமூலம் செம்மணியில் மட்டும் 10 இற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் இருப்பதை பகிரங்கமாகத்

**“80 களில் ஜேவிபியின் காலத்தில், அதன் தலைவர் ரோகண விஜயவீரவுடன் கிட்டத்தட்ட 60,000 இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற் போயினர் என்று கருதப்படுகிறது. அப்போதும் அவற்றைத் தட்டிக்கேட்க யாரும் பெரிதும் முன்வரவில்லை. சிங்களத் தலைமைகளில் நம்பிக்கையுடன் இருந்தனர் சிங்களர்கள். தலைநகரை உலுக்கிய அண்மைய போராட்டமும், அதில் பங்குபற்றியோர் காணாமல் போனதும் இப்போதுதான் சிங்கள மக்களை உலுக்க ஆரம்பித்திருக்கிறது”**



தெரிவிக்கிறது. இருந்தும் ஐநாவும் வெளியுலகும் பெரிதாக எதையும் செய்துவிடவில்லை. மக்களின் கொந்தளிப்பினால், ஒரு கட்டத்தில் நீதிமன்ற விசாரணை நடைபெற்றது. கிரிசாந்தி பாலியல் வழக்கு என்று அதில் சம்பந்தப்பட்ட அறுவருக்கு மரணதண்டனை அளிப்பதாக நீதிமன்றம் அறிவித்ததுடன் அது முடிவிற்கு வந்தது. இங்கு மனிதப் புதைகுழிகள், அவற்றைச் செய்தவர்கள் என்ற ஆதாரங்கள் எல்லாம் இருந்தும் எந்த சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்படவில்லை.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை தெரியவில்லை.

எங்காவது அரச உயர் பதவியில் இருக்கலாம். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பில் நல்லாட்சிக் காலத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டபோது, சட்டத்தரணிகள், முறையிட்டோர், ஆதரவு கொடுத்தோர் என்று அனைவரும் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே இராணுவ புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டனர். இந்த வழக்கை முன்னின்று நடத்திய கலாநிதி குருபரன் குமரவடிவேல் இராணுவ அழுத்தங்களினதும் அச்சுறுத்தல்களினதும் காரணமாக யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து பதவி விலக வேண்டியிருந்தது. இராணுவ அதிகாரிகள் எவ்வாறு சிரத்தையாக தமது கடமைகளைச் செய்தார்கள் என்று அரச சட்டத்தரணிகள் கூசாமல் அள்ளி விட்டதை நீதிமன்று மறுதலிக்கவில்லை.

இவை தமிழர் மண்ணில் நிகழ்ந்த கொடூரங்களின் ஒரு துளிதான். கண்டு பிடிக்கப்பட்ட புதைகுழிகளில் இருக்கும் ஒவ்வொரு மனித எச்சமும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் , அவர்களைத் தேடித் தவிப்போர் குடும்பமும் இப்படி பல்லாயிரம் கொடூர நிகழ்வுகளைத் தாங்கியிருக்கின்றன. தமிழனுக்கு நீதிதான் இன்னமும் கிடைத்தபாடில்லை. அண்மையில் சிங்களப் பிரதேசமான மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மனிதப்புதைகுழி பேசு பொருளாக உலா வருகிறது. எல்லாமாக 154 உடல்கள் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்கிறது தடயவியல் குழு. 1988– 1990 காலப்பகுதியில் பிரேமதாஸவினால் கொல்லப்பட்ட சிங்கள் இளைஞர் யுவதிகளாக இருக்கலாம் என்று இது கருதப்படுகிறது. இருத்தும் 1950 களில் காலரா நோயால் கொல்லப்பட்டவர்களின் மயானம் இது என்று சப்பைக்கட்டு கட்டவும் ஒரு வைத்தியர் குழாம் தயாராக இருக்கிறது.

தமிழர் தாயகத்தைப் போலவே கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் கிடைத்த சில சடலங்கள் இனவெறி ஆட்சியாளர் தம்மை எதிர்த்து நியாயம் கேட்கும் எவரையும் அது சிங்களவர் ஆயினும் விட்டு வைக்க மாட்டார்கள் என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

80 களில் ஜேவிபியின் காலத்தில், அதன் தலைவர் ரோகண விஜயவீரவுடன் கிட்டத்தட்ட 60,000 இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற் போயினர் என்று கருதப்படுகிறது. அப்போதும் அவற்றைத் தட்டிக்கேட்க யாரும் பெரிதும் முன்வரவில்லை. சிங்களத் தலைமைகளில் நம்பிக்கையுடன் இருந்தனர் சிங்களர்கள். தலைநகரை உலுக்கிய அண்மைய போராட்டமும், அதில் பங்குபற்றியோர் காணாமல் போனதும் இப்போதுதான் சிங்கள மக்களை உலுக்க ஆரம்பித்திருக்கிறது.

**எமது நிலத்தில் மண்வெட்டி கொண்டு ஆழத்தோண்டவே பயப்பட வேண்டியிருக்கிறது. ஒரு மாபெரும் மனிதப் புதைகுழிமீது நாங்கள் நடமாடுவதாகத் தோன்றும் உணர்வைத் தவிர்க்க முடிவதில்லை. சிங்களப் பகுதி புதைகுழிகள் வெளி வரட்டும். அப்போதாவது தமிழனின் வலி, நாங்கள் படும் துயரங்கள், வலிந்து காணாமற் போனவர்களைத் தேடும் தவிப்புகள் சிங்கள இனத்துக்கு புரிய வரலாம்.**





நவீன்

# வடக்கு, கிழக்கில் 'இனவாத' ஆத்திரமூட்டல்கள்

ஜூன் 7 அன்று அதிகாலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு, ஜூன் 2 அன்று மருதங்கேணியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் அவர் கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரைக் கைது செய்ய முடியாது என சபாநாயகர் உறுதியளித்த போதிலும், கைது செய்வதற்கான அனைத்து நடைமுறைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனக்கு உள்ள சிறப்புரிமைகளையும் மீறி, தாம் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டதாக பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



ஜூன் 2 அன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்கில் உள்ள மருதங்கேணியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் பொன்னம்பலத்திடம் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக பொலிஸார் அவரை கைதுசெய்துள்ளனர். இது பொலிஸ் இட்டுக்கட்டிய கதையாகும்.

அன்று மாலை 3 மணியளவில் பொது விளையாட்டு மைதானத்தில் சுமார் 25 பேருடன் பொன்னம்பலம் பேசிக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் சுமார் 15 அடி தூரத்தில் நின்று நிகழ்வை நோட்டம் விட ஆரம்பித்தனர். அவர்கள் யார் என்று கேட்டபோது, அந்த நபர்கள் தங்களை புலனாய்வு அதிகாரிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, சட்டவிரோதமாக கூட்டம் நடத்துவதாகக் குற்றம்சாட்டினர். அதே நேரம் அவர்கள் தங்களது உத்தியோகபூர்வ அடையாள அட்டையைக் காட்ட மறுத்துவிட்டனர்.

பொன்னம்பலம், அவர்களது சேவை அடையாள அட்டையை வழங்குமாறு வற்புறுத்திய போது, ஒருவர் பொன்னம்பலத்தை தாக்கிவிட்டு அருகில் இருந்த பாடசாலை வளாகத்தில் இருந்த வேலியை நோக்கி ஓடினார். பொன்னம்பலம் அவரைத் தடுக்க முயன்றார். மற்றவரை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் பிடித்து வைத்துக்கொண்டனர்.அப்போது, பாடசாலை வளாகத்தில் இரு பொலிஸார், ஒருவர் சீருடையிலும் மற்றொருவர் விளையாட்டு ஆடையிலும் இருந்தனர். அவர்கள், குறித்த நபர்கள் பொலிஸ் அதிகாரிகள் என்பதை உறுதி செய்ததோடு அவர்களை விடுவிக்குமாறு கோரினர்.

விளையாட்டு ஆடை அணிந்திருந்த பொலிஸ் அதிகாரி கைத்துப்பாக்கியை எடுத்து பொன்னம்பலத்தை குறிவைப்பதைக் கூட்டத்தினர் கண்டனர். மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயதிஸ்ஸ சம்பவ இடத்திற்கு வந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரை மீட்பதற்காக தலையிட்டார்.

இந்த துன்புறுத்தல் குறித்து பொன்னம்பலம் முறைப்பாடு செய்தபோது, வாக்குமூலமளிக்க மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கூறியிருந்தார். அதே பொலிஸ் நிலைய அதிகாரிகளால் தான் மிரட்டப்பட்டதால் பொன்னம்பலம் இந்த கோரிக்கையை நிராகரித்தார்.

ஜூன் 2 அன்று மருதங்கேணியில் உண்மையில் நடந்தது இதுதான். பொலிஸ் அல்லது வேறு எந்த நபர்களாலும் தங்களின் கலந்துரையாடல் கண்காணிக்கப்படுவதை எதிர்க்கும் அனைத்து உரிமையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு உண்டு.

இந்தக் கைதுக்கு முன்னர், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மேலும் இரு முன்னணி உறுப்பினர்களான வடமராட்சி கிழக்கு அமைப்பாளரான அருள்மதி, கட்சியின் செயற்பாட்டாளரான



உதயசிவம் ஆகியோரும் இதே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் ஜூன் 6 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசியவாத அரசியலை சோசலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க.) கடுமையாக எதிர்ப்பது பிரசித்தமான விடயம். எனினும், சோசலிச சமத்துவக் கட்சியானது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் அவரது கட்சி உறுப்பினர்களையும் பொலிஸார் கைது செய்து துன்புறுத்தியதை கண்டிக்கிறது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மீதான அனைத்து சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். எந்தவொரு அரசியல் கட்சி அல்லது குழுவின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் தமிழ் மக்களின் பிற நிகழ்வுகள் மீதான அனைத்து இராணுவ-பொலிஸ் கண்காணிப்புகளும் நிறுத்தப்பட வேண்டும்.

பொலிஸ் ஆத்திரமூட்டலுக்கு அடுத்த நாள், அரசுக்கு சொந்தமான நாளிதழான டெய்லி நியூஸ், பாராளுமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவே இந்த பொலிஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டதாக பொய்யாக ஒரு செய்தியை வெளியிட்டது. பொலிஸ் துன்புறுத்தலை நியாயப்படுத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்தூவ, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், இந்த சந்திப்பு அருகில் உள்ள பாடசாலையில்

**பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பொலிஸாரின் அதீத நடவடிக்கை, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை அம்பலப்படுத்துகிறது. 2009 மேயில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இனவாதப் போர் முடிவடைந்த பின்னரும், தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழேயே உள்ளன.**

நடைபெற்றுக் கொண்டிருந்த பரீட்சை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்ததாலேயே பொலிஸார் தலையிட வேண்டியிருந்தது, என்றார்.இந்தக் கதைகள் ஆதாரமற்றவை. கூட்ட ஏற்பாட்டாளர்கள் எந்த ஒலி பெருக்கி சாதனத்தையும் பயன்படுத்தவில்லை.

சிங்கள மொழி நாளிதழான திவயின ஜூன் 6 அன்று தலையங்கம் ஒன்றை வெளியிட்டு, பொன்னம்பலம் பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கியதாக குற்றம் சுமத்தியுள்ளது. ‘பொலிஸின் கண்ணியத்தை’ பாதுகாப்பதற்காக பொன்னம்பலம் மீது மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தியதற்காகவும் தலையங்கம் பாராட்டியுள்ளது. பொலிஸாரை தாக்குவதற்கு ‘முயற்சி செய்ததற்காக’பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்மொழிவதன் மூலம் அது முடிவடைந்தது.

பொன்னம்பலத்தை கைது செய்த விவகாரம் பாராளுமன்ற அமர்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்டபோது, அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸின் நடவடிக்கையை ஆதரித்தனர்.

இதற்கு மேலதிகமாக, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்ததில் பொலிஸார் எந்தத் தவறும் செய்யவில்லை என பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது பொலிஸின் நடவடிக்கைகளுக்கு வெற்று காசோலையை கொடுப்பதைத் தவிர வேறில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பொலிஸாரின் அதீத நடவடிக்கை, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை அம்பலப்படுத்துகிறது. 2009 மேயில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இனவாதப் போர் முடிவடைந்த பின்னரும், தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழேயே உள்ளன.

மேலும், இந்தப் பிரதேசங்களில் இராணுவம் மற்றும் பொலிஸின் ஒத்துழைப்புடன் ‘தொல்பொருள் இடங்களைப் பாதுகாத்தல்’ என்ற போர்வையில் பல இடங்களில் பௌத்த விகாரைகளைக் கட்டும் இனவாத ஆத்திரமூட்டல்கள் அதிகரித்து வருகின்றன.



**பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பொலிஸாரின் அதீத நடவடிக்கை, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை அம்பலப்படுத்துகிறது. 2009 மேயில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இனவாதப் போர் முடிவடைந்த பின்னரும், தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழேயே உள்ளன.**

முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக, தெற்காசியாவிலும் சர்வதேச அளவிலும் சோசலிசத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிச குடியரசை ஸ்தாபிப்பதற்கான போராட்டத்தில், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனப் பாகுபாடுகளைக் கடந்து தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட போராட்டத்தில் மட்டுமே, தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத



ஒடுக்குமுறை மற்றும் பாகுபாடுகளுக்கு முடிவுகட்டுவதும், ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதும் சாத்தியமாகும்.


பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட போது, 'எல்லாச் சட்டங்களும் சிங்களவர்களுக்காகவே அமுல்படுத்தப்படுகின்றன. சட்டங்கள் தமிழருக்கானவை அல்ல. தமிழர்கள் விடயத்தில் பொலிஸார் அவர்களின் விருப்பப்படி செயற்படலாம்,' என அவர் அறிவித்தார்.

இலங்கையின் ஆளும் கும்பல் மற்றும் முதலாளித்துவ அரசின் கைகளால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இனவாத பாகுபாட்டிற்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகிறார்கள் என்பது உண்மைதான். அதற்காக, சிங்கள இனத் தொழிலாளர்களும் ஏழைகளும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் அரசின் கைகளில் சலுகை பெறுகிறார்கள் என்று அர்த்தமல்ல.

கடந்த ஆண்டு தொழிற்சங்கங்கள் மற்றும் போலி இடது முன்னிலை சோசலிசக் கட்சியால் காட்டிக்கொடுக்கப்பட்ட பாரிய மக்கள் எழுச்சியின் பின்னர், ஜனநாயக விரோதமாக ஜனாதிபதியாக பதவியேற்ற அமெரிக்க சார்பு ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் சர்வாதிகார ஆட்சியை மேலும் வலுப்படுத்துகிறார். விக்கிரமசிங்கவும் அவரது அரசாங்கமும் ஒட்டுமொத்த ஆளும் வர்க்கமும், சமூக எதிர்ப்பை அடக்குவதற்கு கொடூரமான சட்டங்களையும் இராணுவ-பொலிஸையும் நம்பியிருக்கின்றனர்.

இந்த எதிர்ப்புரட்சிகர நகர்வுகளை தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப் போராட்டத்திலும், கிராமப்புற ஏழைகளை அணிதிரட்டுவதன் மூலமும், சர்வதேச தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்படுவதன் மூலமும் மட்டுமே தோற்கடிக்கப்பட முடியும்.

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும் அடக்குமுறை



வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், தமது சமூக அரசியல் உரிமைகளை அடைவதற்காக எவ்வளவு அடக்குமுறைகளை எதிர்நோக்கி இருப்பார்கள் என்பதை, இப்போதுதான் தெற்கில் வாழும் மக்கள் உணர ஆரம்பித்துள்ளார்கள். தம் மீதும் அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருக்கும் நிலையிலேயே, அவர்கள் இந்த உணர்வைப் பெற்று வருகிறார்கள்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு வயது நான்கு தசாப்தங்கள் என்பது அதன் அர்த்தம் அல்ல. அந்த அடக்குமுறை 1950 களிலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால், 1980களில் தான், அந்த அடக்குமுறையின் தீவிரம் வெளி உலகிற்குத் தெரிய ஆரம்பித்தது. அதேபோல், தெற்கே வாழும் மக்கள் மீது, இப்போதுதான் அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதும் அதன் அர்த்தம் அல்ல. அந்த அடக்குமுறை, இதற்கு முன்னர் ஒரு சிறிய குழுவை, குறிவைத்து கட்டவிழ்த்ததால், தெற்கே வாழும் மக்கள் அதன் பயங்கரத்தை உணரவில்லை.

இப்போது தெற்கே பெரும்பாலான மக்கள், பிரதான அரசியல் கட்சிகளை விட்டு ஒதுங்கும் நிலை உருவாகி வருவதால், அடக்குமுறையும் பெரும்பாலான மக்களை குறிவைக்கிறது. இதை அந்தப் பெரும்பாலான மக்களும் உணர்கிறார்கள்.

இதற்கு முன்னர் அடக்குமுறையானது வடக்கு, கிழக்கில் தனி நாட்டுக்கான போராட்டம் மற்றும் தெற்கில் ஆயுதப் பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டம் போன்ற பாரிய அரசியல் போராட்டங்களையே குறிவைத்தது. ஆனால், தற்போதைய அடக்குமுறையானது அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்ட கருத்துச் சுதந்திரம், தொழிற்சங்கப் போராட்டச் சுதந்திரம் போன்ற அடிப்படை சுதந்திரங்களையே பறிக்க முற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னரே, இந்தப் புதிய நிலைமை உருவாகி இருக்கிறது. அவர், மக்கள் ஆணை பெற்று ஜனாதிபதியாக வில்லை. மக்கள் ஆணை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒருவருக்கு ஜனாதிபதியாவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் சட்டப் பிரமாணம் ஒன்றின் அடிப்படையிலேயே அவர் ஜனாதிபதியானார். பொருளாதார நெருக்கடியால் கோபமுற்ற மக்கள், கடந்த வருடம் இலட்சக்கணக்கில் வீதியில் இறங்கி நடத்திய போராட்டமும் அவருக்கு உதவியது.



புனிதப்ரியா
பன்னீர்செல்வம்



ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்ற வுடன் அவர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கை, தம்மை நாட்டில் அதிஉயர் பதவியில் அமர்த்திய போராட்டக்காரர் களை, படையினரை ஏவி அடித்து விரட் டியதேயாகும். அதன் பின்னர், தம்மை ஜனாதிபதி கதிரையில் அமர்த்திய போராட் டத்தை, பாசிசவாதம் என அவர் வர்ணித் தார். அன்று முதல் அவர், அது போன்ற தொரு மக்கள் போராட்டம் தலைதூக்காதி ருக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று சுமார் ஒன்றரை மாதங்களுக் குப் பின்னர், அவரது அரசாங்கத்தின் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, புனர்வாழ்வு பணியகம் ஒன்றை தாபிப்பதற் கான சட்டமூலத்தை வர்த்தமானி மூலம் வெளியிட்டார். அதை அவர் அதே மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப் பித்தார்.

'சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு தேவைப்படுத்துகின்ற ஔடதங்களில் தங் கியுள்ள ஆட்கள், முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிர குழுக்களின் உறுப்பினர்கள், மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள், குழுவுக்கு புனர்வாழ்வளிப்பதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கம்' என அதி லேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் மூலம், அரசாங் கத்துக்கு எதிரானவர்களை எங்காவது அடைத்து வைப்பதற்கான திட்டமே இது என்பது தெளிவாகிறது. அதேவேளை, கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை அடுத்து, அதில் கலந்து கொண்டவர்களைக் குறிவைப்பதாகவும் அமைந்துள்ளது.

முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம், எதற்காக இப்போது புனர்வாழ்வளிக்கப் போகிறது என்பது தெளிவாகவில்லை. அதேவேளை, அவர்களையும் போதைப்பொ ருட்களுக்கு அடிமையானவர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் அரசாங்கம் பார்க்

**"முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம், எதற்காக இப்போது புனர்வாழ்வளிக்கப் போகிறது என்பது தெளிவாகவில்லை. அதேவேளை, அவர்களையும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் அரசாங்கம் பார்க்கிறது. வன்முறையான அதிதீவிர குழுக்கள் என்றால், எவை என்பதும் தெளிவில்லாமல் இருக்கிறது."**

கிறது. வன்முறையான அதிதீவிர குழுக்கள் என்றால், எவை என்பதும் தெளிவில்லா மல் இருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரானவர்களை, இந்த வகையினராக கருதி பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாம். 'மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள்' என்பதன் கீழ், எவ ரையும் புனர்வாழ்வு என்ற பெயரில் எங் காவது வருடக் கணக்கில் அடைத்து வைக்கலாம். இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக, மனித உரிமைகள் ஆணைக்குழு வின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குண நாதன் உள்ளிட்ட சிலர், அடிப்படை உரிமை மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அதன் பிரகாரம், இந்தச் சட்டமூலம் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்க ளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனையவர்கள் இதில் உள்ளடக்கப்பட்டு உள்ளதன் மூலம், இந்தச் சட் டமூலம் மொத்தமாகவே அரசியலமைப்புக்கு முரணானது என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்ப ளித்தது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன, கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி அதனை சபையில் அறிவித்தார். அத்தோடு அரசாங்கம் அதனை கைவிட்டுவிட்டது.

இதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இது போன்றதொரு சட்டத்தை கொண்டு வந்தார். அவர், தீவிர வாதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலொன்றை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி வெளியிட் டார். அதன்படி தீவிரவாதி எனத் தாம் சந்தேகிக் கும் எவரையும் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிவானிடம் அறிவித்துவிட்டு, வழக்கு விசாரணையின்றி புனர்வாழ்வு நிலை யத்தில் இரண்டு வருடங்கள் தடுத்து வைக்க பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமை மனுக்களை விசாரித்த உயர்நீ திமன்றம், 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் ஐந்தாம் திகதி அந்த வர்த்தமானியை இடைநிறுத்தியது.

விஜயதாஸவின் புனர்வாழ்வு சட்டமூலம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே, ஜனாதிபதி ரணில் மற்றோர் அடக்குமுறை சட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிட்டார். அதன் கீழ் அவர், கொழும்பு மற்றும் புறநகர் பிரதேசங்களில் எட்டு உயர் பாதுகாப்பு வலயங் களை பிரகடனப்படுத்தினார். அதிலும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் கூடுவதும், ஊர்வலம் நடத்துவதும் தடை செய்யப்பட்டது.

எனவே நாட்டில், மக்களின் ஆர்ப்பாட்டங் களை தடுப்பதே இந்த உயர் பாதுகாப்பு வல யங்களின் நோக்கமென்பது தெளிவாகிறது. அதாவது, கடந்த வருட மக்கள் எழுச்சியை அடுத்து, அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களைப் பற் றிய பயத்துடனேயே காலத்தை கடத்துகிறது.

இது போன்ற அடக்குமுறை சட்டங்கள், நாட்டு மக்களில் ஒருசாராரை மட்டும் பாதிக்கப் போவதில்லை. வடக்கு மக்களைப் போலவே, தெற்கு மக்களையும் பாதிக்கும். அதேவேளை, வடக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கும் நாடு முழுவதிலும் சமூக அமைப்புமுறையை மாற்றி அமைப்பதற்கான ஜனநாயக உரிமை போராட்டத்துக்குமான சகல வழிவகைகளையும் இந்த அடக்குமுறைச் சட் டங்கள் மூடிவிடும்.

அவ்வாறான அரசியல் போராட்டங்களைப் பற்றி, நினைத்தும் பார்க்க முடியாத நிலையை அவை உருவாக்கும். அந்த நிலைமை, ஏற்கெ னவே ஓரளவுக்கு உருவாகியும் இருக்கிறது. இதை வடக்கிலும் தெற்கிலும் உள்ள அரசி யல்வாதிகள். கூட்டாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஹிமால்



# இலங்கையில் தமிழ் பௌத்தம்?

## சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மிக சமீபத்திய இனப்பிரச்சனை



இலங்கையில் தமிழ் பௌத்தத்தின் வரலாற்றுத் தன்மையானது, குறைந்தபட்சம் தெற்கிலாவது, பொது மக்களின் கற்பனையைக் கவர்ந்த விடயமாக இருக்கவில்லை. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்திய கருத்துக்கள் புதிய ஆர்வத்தை தூண்டியிருக்கலாம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞானத் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.பி.வி சோமரத்னவின் கூற்றுப்படி, இலங்கையில் தமிழர்கள் மத்தியில் பௌத்தத்தின் பண்டைய வரலாறு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மிக சமீபத்திய இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய தப்பெண்ணங்களுடன் சிக்கியுள்ளது.

'இலங்கையில் தமிழ் பௌத்தம்' என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட ஒரு கட்டுரையில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பல பௌத்த தொல்பொருள் தளங்கள் சர்ச்சைக்குரிய கூற்றுக்களை உருவாக்கியுள்ளன.மேலும் மோதலின் தீவிரத்துடன் அரசியல்மயமாக்கப்பட்ட விளக்கத்திற்கு உட்பட்டுள்ளன என்று சோமரத்ன குறிப்பிடுகிறார்.

'இரு குழுக்களும் தங்கள் தரப்பின் உரிமை கோரல்களை ஊக்குவிக்க ஒரு நிகழ்ச்சி நிரலுடன் வாதிடுகின்றனர். கல்வி சார் பாரபட்சமற்ற எல்லைகளை மீறுகின்றனர்,' என்று இந்தக் கல்விமான் குறிப்பிட்டுள்ளார்.

சோமரத்னவின் கூற்றுப்படி, தொல்லியல் துறையில் முன்னணியில் ஈடுபட்டுள்ள ஒரு முக்கிய பௌத்த பிக்கு உட்பட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், தமிழர்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்பொருள் கண்டுபிடிப்புகளுக்கு சிங்கள பௌத்த பூர்விகத்தை காரணம் காட்ட முயற்சித்துள்ளனர்.ஏனைய அறிஞர்கள் முழுத் தமிழ் பாரம்பரியம் அல்லது இரண்டு மாகாணங்களில் காணப்படும் பௌத்த இடிபாடுகளில் தமிழர் உரிமையை விளக்கியுள்ளனர்.

முழுத் தீவையும் தமிழர்களின் பாரம்பரியம் என்று கூறும் எழுத்தாளர்கள் உள்ளனர்.மேலும் சிலர் தீவை சிங்கள-பௌத்த பாரம்பரியம் என்று கோருகிறார்கள். சர்வதேச புகழ் பெற்ற அறிஞர்கள் கூட இந்தக் குழியில் விழுந்துள்ளனர் என்று சோமரத்ன எழுதுகிறார்.

பல நூற்றாண்டுகளாக சமாதான காலத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் சுமுகமான உறவுகளை அனுபவித்து வந்த இலங்கை சமூகத்தில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் பின்னர் இனப்பிரிவினை பற்றிய கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியதாக அறிஞர் வாதிடுகிறார்.

'மத வேறுபாடுகள் பொதுவாக இனப் பதற்றங்களுக்கு சுவாலை ஏற்றவில்லை' என்று அவர் எழுதுகிறார்.டச்சுக்





காலத்தில் இரு சமூகங்களுக்கிடையில் இனரீதியான வேறுபாடுகள் கூர்மையான சாதிப் பிரிவுகளுக்கு மாறாக பெரும்பாலும் காணப்படவில்லை.

'இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த தலங்கள் கண்டுபிடிப்பு பற்றிய முரண்பாடு மதத்தையும் இனத்தையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக அடையாளம் காணும் முயற்சியில் இருந்து வெளிப்படுகிறது,' என்று அவர் கூறுகிறார். சோமரத்னவின் கட்டுரை, இலங்கையில் உள்ள தமிழ்–பௌத்த இடங்களின் முழுமையான உதாரணங்களையும் தமிழ்நாட்டில் தமிழ் பௌத்தத்தின் தோற்றம், அதன் பரிணாமம் மற்றும் வட இலங்கையில் அதன் விரிவாக்கம் மற்றும் அதன் வரலாறு பற்றிய விரிவான வரலாற்று பதிவையும் வழங்குகிறது.

சோமரத்ன அந்த கட்டுரையில் முன்வைத்த ஒரு வாதம் என்னவென்றால், சில அறிஞர்கள் உட்பட சிங்களவர்களும் தமிழர்களும் தங்களின் சொந்த அரசியல் உள்நோக்கம் கொண்ட காரணங்களுக்காக தமிழ் பௌத்தத்தின் வரலாற்றுத் தன்மையை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள் என்பதாகும்.

இன்று தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த தொல்பொருள் இடங்கள் இருப்பது அங்கு சிங்களவர்கள் இருப்பதை நிரூபிக்கும் என்று சில சிங்கள பௌத்த அறிஞர்கள் கருதுகின்றனர்.இலங்கையில் பௌத்தம் சிங்களவர்களுக்கே உரியது என்பது சிங்கள பௌத்தர்கள் மத்தியில் உள்ள எண்ணம்.

'இந்த அனுமானத்தில் தமிழர்களும் கடந்த காலத்தில் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள விருப்பமின்மை இருப்பதாகத் தெரிகிறது' என்று அவர் எழுதுகிறார்.

மறுபுறம், தற்போது இந்த நிலங்களில் வசிக்கும் தமிழ் மொழி பேசுபவர்களும் ஜனரஞ்சக சிங்கள அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக அதனைப் பயன்படுத்துகிறார்கள் என்ற அச்சம் காரணமாக பௌத்த ஸ்தலங்களை கண்டுபிடிப்பதில் 'அசௌகரியமாக ' இருப்பதாகவும் சோமரத்ன கூறுகிறார்.

பௌத்தம் தொடர்பான கடந்த காலம் இன்று பல தமிழர்களுக்கு விரும்பத்தகாததாக உள்ளது.இதனால் தங்கள் முன்னோர்கள் கடந்த காலத்தில் பௌத்தர்களாக இருந்துள்ளனர் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றனர்.இன்று இலங்கையில் பெரும்பாலான தமிழர்கள் இந்துக்கள் அல்லது கிறிஸ்தவர்கள். சிங்களம் மற்றும் தமிழர் தரப்பில் உள்ள நவீன ஆய்வாளர்கள் தங்கள் பக்கம் உண்மை என்பதை நிரூபிப்பதற்காக ஒரு நிகழ்ச்சி நிரலில் வேலை செய்கிறார்கள், என்று பேராசிரியர் எழுதுகிறார்.

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதி விக்கிரமசிங்க தீவு தேசத்தில் தமிழ் பௌத்தத்தின் வரலாற்றுத் தன்மையை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். ஜனாதிபதியின் கருத்துக்கள் வரவேற்கத்தக்கது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தமிழ் பௌத்தத்தை வரலாற்று உண்மையாக அங்கீகரிப்பது 'பல முட்டுக்கட்டைகளுக்கு திறவுகோல்' என்று கூறியுள்ளார்.


ஜூன் 12இல் திங்கட்கிழமை ராஜினாமா செய்த தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்கவுடன் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் நடந்ததில் விக்கிரமசிங்க தனது கருத்தை வெளியிட்டதாக தென்படுகிறது.

புராதன சின்னங்களைப் பாதுகாப்பதாக கூறப்படும் போர்வையில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் திணைக்களம் மேற்கொண்ட காணி சுவீகரிப்பு தொடர்பில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தமிழ்த் தொகுதிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலருடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்த பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தார்.

குறிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமானது என்று விமர்சகர்கள் கூறுகின்ற நிலம் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் கையகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சர்ச்சையின் மையத்தில் தொல்பொருள் திணைக்களம் சில வருடங்களாக இருந்து வருகிறது.

வரலாற்றாசிரியர் கலாநிதி ஷாமர வெற்றிமுனி, ஜூன் 13 செவ்வாய்கிழமை 'எகானமி நெக்ஸ்ட்' உடன் பேசுகையில், இலங்கையில் உள்ள பல்வேறு தொல்பொருள் இடங்கள் பற்றிய நவீன அறிவியல் ரீதியான விசாரணையானது பிரித்தானிய காலனித்துவ கால வேர்களைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

வெற்றி முனியின் கூற்றுப்படி, தொல்பொருள் திணைக்களத்தின் தோற்றம் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் தலையீட்டில் இருந்தே அறியப்படுகிறது.1858 ஆம் ஆண்டில்,அனுராதபுரத்தில் உள்ள புராதன நினைவுச்சின்னங்களை ஆய்வு செய்ய தொல்பொருள் ஆணைக்குழுவொன்று அப்போதைய ஆளுநரால் நியமிக்கப்பட்டது.மேலும் காலப்போக்கில் சீர்திருத்தங்களின்போது அகழ்வாராய்ச்சிக்கு அதிக அரச நிதி வழங்கப்பட்டது.1890 ஆம் ஆண்டில், எச்.சி.பி.பெல் முதலாவது தொல்லியல் ஆணையாளராக நியமிக்கப்பட்டார், தொல்பொருளியல் திணைக்களத்தின் இன்றைய பணிப்பாளர் நாயகத்துக்கு இணையானவர் இவர்.





தீவின் வரலாற்றுத் தளங்களைப் பற்றிய ஆய்வானது அறிவுக்காக மட்டும் செய்யப்படவில்லை. மாறாக, பிரதீப் ஜெகநாதன் அவதானித்தபடி , 'குடியேற்ற முயற்சிகளில் வரலாற்று அறிவு மிகவும் மையமாக இருந்தது 'கடந்த காலத்தை'அறிவது 'நிகழ்காலத்தை' கட்டுப்படுத்துவதற்காகவாக இருந்தது என்று வெற்றி முனி கூறியுள்ளார்.

இது தொல்லியல் திணைக்கள பிரித்தானிய ஆர்வத்திற்கு மிகவும் பொருந்தும். மற்றும் உண்மையில், பிந்திய காலனித்துவம் இலங்கை அரசுக்கு இருந்தபோதும், தொல்பொருள் ரீதியாகப் பேசினால், இலங்கை வரலாற்றின் சிங்கள – பௌத்த விபரிப்புக்கு பிரித்தானியர்கள் முன்னுரிமை அளித்தனர், என்று அவர் கூறியுள்ளார்.

தீவு தேசத்தின் வரலாற்றில் சிங்கள பௌத்த கதைக்கு பெருமை சேர்க்கும் இந்த காலனித்துவ மரபு இன்றுவரை தொடர்கிறது என்று வெற்றி முனி நம்புகிறார்.

'இன்று தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சின்னத்தை பார்த்தால், எந்த வகையான வரலாற்று தளத்திற்கு அரச ஆதரவு வழங்கப்படுகிறது என்பது எந்த வகையிலும் நிச்சயமற்ற ஆர்வத்தை விட்டுவிடும்,'பெரும்பாலும் ஏனைய தொல்பொருள் தளங்களின் இழப்பில், என்று அவர் கூறியுள்ளார்.

தனது பரவலாகப் பகிரப்பட்ட தனது ஆய்வறிக்கையில் பேராசிரியர் சோமரத்ன குறிப்பிட்டுள்ளபடி, புதிய இலங்கை தேசத்தில் வரலாற்று அடிப்படையிலான இரண்டு இனங்களின் லட்சியங்கள் மோதுகின்றன. இது தமிழ் பௌத்தம் மற்றும் அதன் வரலாறு பற்றிய முரண்பாடான கதைகளுக்கு பங்களிக்கிறது.

தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களில் வரலாறும் தொல்லியல் திணைக்களமும் அரசியல் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.சிங்கள பௌத்த தேசம் அரசியல் மயப்படுத்தப்பட்ட காலத்தில், அனுராதபுரம் புதிய தேசியவாத உணர்வால் உருவானது.

> **இன்று தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த தொல்பொருள் இடங்கள் இருப்பது அங்கு சிங்களவர்கள் இருப்பதை நிரூபிக்கும் என்று சில சிங்கள பௌத்த அறிஞர்கள் கருதுகின்றனர். இலங்கையில் பௌத்தம் சிங்களவர்களுக்கே உரியது என்பது சிங்கள பௌத்தர்கள் மத்தியில் உள்ள எண்ணம்**

சிங்கள– பௌத்த தேசம் என்பது வரலாற்று ரீதியாக ஒரே மாதிரியான மற்றும் சீரான அமைப்பு என்பது இந்தக் கருத்து. வரலாற்றின் இந்த விளக்கத்தின் நோக்கம் சிங்களம் மற்றும் தமிழ் இனக் குழுக்களின் கற்பனையான வரலாற்றில் கடந்த காலத்துடன் தொடர்புகளை உறுதிப்படுத்தும். இது ஆபத்தான தேசியவாதத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது [நிசான் 1989:64]. இரு தரப்பினரும் வரலாற்றின் உண்மைகளில் உண்மையான ஆர்வதை காட்டவில்லை, ஏனெனில் அவர்களின் நோக்கம் இன்றைய தேவைகளுக்கு வரலாற்றின் பெயரைப் பயன்படுத்துவதாகும், என்று அவர் எழுதுகிறார்.

கல்விமான்களின் கூற்றுப்படி, யாழ்ப்பாணத்தின் பௌத்த வரலாற்றைத் தமிழ் ஆய்வாளர்களும் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தியுள்ளனர்.இலங்கையில் உள்ள தமிழர்களின் வரலாற்றை முழு இலங்கையும் சிங்களவர்களின் உரிமை என்ற வரலாற்றின் பின்னணியிலிருந்து ஒருவர் புரிந்து கொள்ள வேண்டியுள்ளதென அவர் வாதிடுகிறார். அவர்கள் வரலாற்றை முன்வைப்பது அவர்கள் தாயகம் என்று கருதும் இடத்தில் இருப்பதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது என்பதைக் காட்டுவதாக என்று குறிப்பிடுகிறார்.

இந்த நிலத்தில் தங்களுக்கு இருக்க உரிமை உண்டு என்பதை அவர்கள் காட்ட விரும்புகிறார்கள். சிங்களவர்கள் தங்கள் வரலாற்றை திருடிவிட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, வரலாற்றை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழர்கள் தங்களுடைய இருப்புக்கான உரிமையையும் அங்கு இருப்பதற்கான உரிமையையும் நிரூபிக்க முயல்வதால், யாழ்ப்பாணத்தில் பௌத்த பாரம்பரியம் பற்றிய வரலாற்று உரிமை கோரல்களின் நோக்கம் அதை நிரூபிப்பதாகும்.ஜனநாயக அரசாங்க இயந்திரத்தின் உதவியுடன் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்தர்களின் கீழ் அடக்கி வைக்கும் முயற்சிகளுக்கு மத்தியில் அது பௌத்தமாக இருந்தாலும் சரி இந்துவாக இருந்தாலும் சரி வரலாற்று உண்மைகளின் விளக்கத்துடன் அவர்கள் தற்போதைய தாயகத்தை நியாயப்படுத்த விரும்புகிறார்கள்.





# தொல்லியல் திணைக்களத்தின் கபடத்தனமான செயற்பாடு

இலங்கையின் இன மோதலுக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக இலங்கை வாழ்மக்களின் இன, மத, மொழி, கலாசார, வரலாறுகளுக்கான ஆதாரங்களை தரவல்ல தொல்லியல் திணைக்களத்தின் குறுகிய பௌத்த – சிங்கள அடையாளம் சார்ந்த தான்தோன்றித்தனமானதும், கபடத்தனமானதுமான செயற்பாடுகளும் ஒன்றாகும். இத்திணைக்களம் இத்தகைய குறுகிய நலன் சார்ந்த கபடத்தனமான செயற்பாடுகளை தனது கொள்கையாகவே கொண்டிருப்பதற்கு சுதந்திர இலங்கையை ஆட்சி செய்துவரும் கோட்பாடான ‘இலங்கை ஓர் பௌத்த – சிங்கள நாடு’ என்ற பொய்யான, மோசடித்தனமான கோட்பாடாகும்.

‘அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி’ என்ற வகையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள கட்சிகள் இப்பொய்யான கோட்பாட்டை உண்மையாக்குவதற்கு ஏற்றவாறே அரசியல் யாப்பினை மாற்றினர். அதன்மூலம் இப்பொய்யான கோட்பாடானது, அரசாங்கத்தின் அனைத்து திணைக்களங்களுக்குள்ளும் உள்வாங்கப்பட்டது.



இவ்வகையில் யுத்தத்தின் பின்னர் வடக்கு – கிழக்கை சிங்கள – பௌத்த மயமாக்கும் நோக்குடன், வேகமாக செயற்படுத்தப்பட்ட திட்டங்களில் முக்கியமானதாக தொல்லியல் திணைக்களத்தின் திட்டங்கள் காணப்படுகின்றன. ஒரு கல்லில் பல மாங்காய்கள் அடிக்கும் மோசடியான திட்டங்களை செயற்படுத்த தொடங்கியது இத்திணைக்களம்.இத்தகைய திட்டங்களை ஏன் நடைமுறைப்படுத்த வேண்டும்? அதற்கான அவசியங்கள் என்ன?

1. இலங்கையின் பூர்வீகக் குடிகள் சைவத்தமிழர்களே. இராவணன் இலங்கை வேந்தன் ஓர் சிவபக்தன். இராமாயண காலகட்டம் 7000 – 8000 வருடங்கள் என்கின்றனர் ஆய்வாளர்கள். பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு 2500 ஆண்டுகளே ஆகின்றன. ஆனால் பௌத்த மேலாதிக்க வெறி கொண்ட ஓர் பிக்குகள் அமைப்பு ‘ராவண பலய’ எனத் தனது அமைப்புக்கு பெயர் வைத்திருப்பதன் மூலம் சைவத்தமிழ் தொன்மையை பகுத்தறிவுக்கு முரணான வகையில் இராவணனை சிங்கள – பௌத்த மரபுரிமையாக திரிக்க முயல்கிறது. சைவ – தமிழரின் பூர்வீக அடையாளத்தை அறிவியலுக்கு அப்பாற்பட்டு சுவீகரிக்க முனைவது, இலங்கையில் சிங்கள – பௌத்த தனித்துவமான அடையாளத்திற்கும் வரலாற்று காலத்திற்கும் ஏற்பட்ட நெருக்கடியும், அதனை நீக்கி சிங்கள – பௌத்த தேசியவாதத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியமான அடையாளங்களை – ஆதாரங்களை கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம். இதனை நிறைவேற்ற தமிழர்களின் வரலாற்று ஆதாரங்கள்

★ அழிக்கப்பட வேண்டும்

★ அவ் ஆதாரங்களை பௌத்த ஆதாரங்களாக உலகை நம்ப வைக்க வேண்டும்.

★ பௌத்த ஆதாரங்கள் ஆக்குவதற்கு பௌத்த கோவில்களை தமிழ் தொல்லியல் இடங்களில் நிறுவ வேண்டும்.



★ தொல்லியல் ஆய்வுப் பிரதேசம் என்ற பெயரில் பல நூறு ஏக்கர் தமிழர் வாழ்விடங்கள் வாழ்வாதார இடங்களை ஆக்கிரமிக்க வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் அரச செலவில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் செய்யப்பட்டு அங்கு தமிழர்கள் சிறுபான்மையாக்கப்பட்டு சிங்கள – பௌத்தத்திற்குள் கரைக்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் தொல்லியல் ஆய்வு என்ற முகமூடிக்குள் நிகழ்த்திவிடும் நோக்கிலேயே யுத்தத்திற்கு பின்னரான தொல்லியல் திணைக்கள செயற்பாடுகள் நிரூபித்து நிற்கின்றன.

2. இலங்கையில் புத்தரின் போதனைகளை பின்பற்றத் தொடங்கிய முதற் குடிகள் தமிழர்களே! 2500 வருடங்களுக்கு முன் கலிங்க மன்னன் அசோகச் சக்கரவர்த்தி சைவ சமயத்தைச் சேர்ந்த மன்னன். புத்தரின் போதனைகளை பின்பற்றத் தொடங்கினான். அப்போது அது ஓர் மதமாக எழுச்சி பெறவில்லை. புத்தரும் ஓர் சைவரே. அவர் தன்னை கடவுள் என்று எப்போதும் கூறியதில்லை. தன்னை கடவுளாக சித்தரிக்குமாறும் கூறவில்லை. தான் கூறுபவற்றை பௌத்த தர்மம் என்றும் கூறவில்லை. அவர் இதனை ஓர் மதத்தை உருவாக்குவதற்கான விடயமாகவும் கருதவில்லை. மாறாக எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும அன்பை, சமாதானத்தை, அகிம்சையை பின்பற்றுவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவே முயன்றார். அதனையே மக்களுக்கும் எடுத்துச் சென்றார்.

அந்த வகையிலேயே அசோகச்சக்கரவர்த்தியும் புத்தரின் போதனைகளை பின்பற்ற தொடங்கியதுடன், இப்போதனைகளை பரப்புவதற்கும் முயற்சித்தார். இதன் விளைவாக தென்னிந்தியா வரை புத்தரின் போதனைகள் விரிந்தன. புத்த துறவிகள் இவற்றை பரப்புவதற்கானவர்களாக செயற்பட்டனர். இவ்வகையில் அசோகனின் மகன் மிகுந்தனும் மகள் சங்கமித்தையும் கூட துறவிகள் ஆகினர்.

அக்காலகட்டத்தில் இலங்கையை ஆண்ட தேவநம்பியதீசன் எனும் சைவத்தமிழ் அரசன் அசோகனின் நட்பு வட்டாரத்தில் இருந்தான். புத்தரின் போதனைகளை அவனுக்கும் போதிக்க அசோகனின் மகனும் மகளும் அனுப்பப்பட்டனர். அவர்கள் தேவநம்பியதீசனுக்கு புத்த மதத்தைப் போதித்தனர். மன்னனை பின்பற்றி மக்களில் (அன்றைய நாகர்கள் தமிழர்களே) ஒரு பகுதியினரும் புத்தரின் போதனைகளை பின்பற்றத் தொடங்கினர்.

**இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் கபடத்தனமானது, தமது சான்றுகளை செய்து அதனுடைய விபரங்கள் எதனையும் பகிரங்கப்படுத்தாமல் தாம் விரும்பியவாறே அதற்கு விளக்கம் கொடுத்து அருங்காட்சியகத்தில் வைப்பது அல்லது உண்மைகளை மூடி மறைத்து புத்த கோவில்களை கட்டியெழுப்புவது என்பதே தொல்லியல் அரசியல் ஆகிறது. தொல்லியல் தடையங்களை துல்லியமாக விளக்கம் கொடுக்க தொல்லியலாளர், வல்லுநர்கள், மானிடவியலாளர்கள், வரலாற்றாளர்களின் கூட்டுச் செயற்பாடு அவசியமாகும்.**

இலங்கைக்கு புத்த தர்மம் அறிமுகப்படுத்தப்படும்போது இங்கு சிங்கள மொழியே தோன்றவில்லை. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே சிங்கள மொழி தோற்றம் பெற ஆரம்பித்தது. எனவே, இலங்கையில் புத்தரின் போதனைகளை முதலில் பின்பற்ற ஆரம்பித்தவர்கள் சைவத்தமிழ் மக்களே.

இதனால்தான் இலங்கையில் பௌத்த கோவில்களில் பெரும்பாலும் சைவக் கடவுளர் சிலைகளோ அல்லது படங்களோ உள்ளன. மேலும் சிங்கள மொழியின் தோற்றம் தமிழில் இருந்து மலையாளம் உருவானதோ அதே போன்று தமிழில் இருந்து தோற்றம் பெற்று பாளி, பின்னர் போர்த்துக்கீஸ் மொழிகள் கலந்து வளர்ந்தது. இறுதியில் பெருமளவு சமஸ்கிருத வார்த்தைகளை உள்வாங்கி இன்றைய சிங்களமாக வளர்ந்துள்ளது.

இன்றைய சிங்கள மொழியின் ஏறத்தாழ 40 – 45 வீதம் தமிழ். ஏறத்தாழ அதே வீதம் சமஸ்கிருதம், மீதி 10 – 15 வீதமே பாளி, போர்த்துக்கீஸ், ஆங்கிலம் ஆகியவை என்பது மொழியியல் வல்லுநர்களின் கருத்தாகும். இவையெல்லாம் கற்றறிந்த சிங்கள மக்களுக்கும் பிக்குகளுக்கும் தலைவர்களுக்கும் தெரியும்.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களால் இலங்கையில் சிங்களவர்களும் பௌத்தர்களும் சைவத் தமிழர்களை விட அதிகமாகி விட்டதாலும் உலகில் வேறெங்கும் சிங்களம் என்ற மொழி இல்லை என்பதாலும் இலங்கையை ஓர் சிங்கள நாடாக்கும் வேட்கையின் கருவியாக பௌத்தம் பாவிக்கப்படுகின்றது.

பௌத்தத்தின் தொன்மை தமிழர்களுக்கு உரியது என்பதை மறைத்து பௌத்தத்தின் தொன்மையை சிங்களத்திற்கும் சமப்படுத்தி சிங்களம் தொன்மையானது என்ற மிகப்பொய்யான ஓர் பிம்பத்தை சுதந்திர இலங்கையின் ஆட்சியாளர்கள் தோற்றுவிக்க முயல்வதன் வெளிப்பாடே தொடரும் தொல்லியல் அரசியல் ஆகும்.

நாகர்கள் சைவர்கள் – தமிழர்கள். பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட முன்னரே நாகர்கள்





இலங்கைத் தீவைச் சுற்றிலும் கடலை அண்டி பெரும்பாலும் துறைமுகங்களை அண்டி அவர்களது நகரங்கள், நாகரீகங்கள் வளர்ந்திருந்தன. வடக்கில் காங்கேசன் துறை துறைமுகத்தை அண்டி நகுலேஸ் வரம், மன்னார் துறையை அண்டி திருக்கே தீஸ்வரம், வடமேற்கில் சிலாபம் துறையை அண்டியதாக முன்னேஸ்வரம், கிழக்கில் திருகோணமலை துறைமுகத்தை அண்டி திருக்கோணேஸ்வரம் தெற்கில் காலி துறை முகத்தை அண்டியதாக தொண்டீஸ்வரம் (கடலால் கொள்ளப்பட்டது) ஆகியவை இலங்கை முழுவதும் பௌத்தத்திற்கு முன் னால் சைவம் நிலவியதற்கு சான்றாகும். இவர்கள்தான் பின்னர் புத்த போதனைக ளையும் பின்பற்றத் தொடங்கினர்.

எனவே, இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளில் பௌத்த எச்சங்கள் கிடைத்தது என்றால் அதற்கு சிங்களவர்கள் மட்டுமே உரிமை கொண்டாட முடியாது. மாறாக கண்டுபிடிக்கப்படும் ஆதாரங்கள் எவை எனினும், அவை எக்காலகட்டத்திற்கு உரி யவை என்பதை துல்லியமாகக் கணிக்கும் விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. சான்றுக ளின் காலகட்டங்களை வைத்துக்கொண்டு அவை தமிழரின் அடையாளங்களா சிங்கள வரின் அடையாளங்களா என்பதை ஓரளவு கூற முடியும்.

இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளில் பௌத்த எச்சங்கள் கிடைத்தது என்றால் அதற்கு சிங்களவர்கள் மட்டுமே உரிமை கொண்டாட முடியாது. மாறாக கண்டுபிடிக்கப்படும் ஆதாரங்கள் எவை எனினும், அவை எக்கால கட்டத்திற்கு உரியவை என்பதை துல்லியமாகக் கணிக்கும் விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. சான்றுகளின் காலகட்டங்களை வைத்துக்கொண்டு அவை தமிழரின் அடையாளங்களா சிங்களவரின் அடையாளங்களா என்பதை ஓரளவு கூற முடியும்.

ஆனால், இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் கபடத்தனமானது, தமது சான்றுகளை செய்து அதனுடைய விப ரங்கள் எதனையும் பகிரங்கப்படுத்தாமல் தாம் விரும்பியவாறே அதற்கு விளக்கம் கொடுத்து அருங்காட்சியகத்தில் வைப்பது அல்லது உண்மைகளை மூடி மறைத்து புத்த கோவில்களை கட்டியெழுப்புவது என்பதே தொல்லியல் அரசியல் ஆகிறது. தொல்லி யல் தடையங்களை துல்லியமாக விளக்கம் கொடுக்க தொல்லியலாளர், .. வல்லுநர்கள், மானிடவியலாளர்கள், வரலாற்றாளர்களின் கூட்டுச் செயற்பாடு அவசியமாகும்.

70 ஆண்டுகால போராட்டத்தின் பின் அண்மையில் ஜனாதிபதி தமிழ் – பௌத்த அடையாளங்களை வெளிப்படையாக ஏற் றுக்கொண்டமையும் அகழ்வாராய்ச்சியின் பெயரால் நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்ப டுவதை கண்டித்தமையும் பௌத்தம் என்றால் சிங்களம், சிங்களம் என்றால் பௌத்தம் என்ற வகையில் வடக்கு – கிழக்கில் தொடரும் நில ஆக்கிரமிப்பும் பௌத்த – சிங்கள மயமாக்கலுக் குமான சிங்கள அரசியல் சமூகத்தின் கபடத் தனத்தை வெளிப்படுத்தும் பேசு பொருளாக ஆகிவிட்டது.

ஜனாதிபதிக்கு வரலாறு தெரியாது என்றோ அவரது கருத்துக்கள் தவறானவை என்றோ தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாய கமோ எல்லாவல மேதானந்த தேரரோ ஏனைய இனவாத அரசியல் தலைவர்களோ கூற வில்லை. மாறாக தங்கள் கள்ளத்தனத்தை அம் பலப்படுத்திவிட்ட கோப மேலீடே இவர்களது கண்டனத்தில் வெளிப்பட்டு நிக்கிறது.

தொல்லியல் ஒழுக்க கோவைகளுக்கேற் பவே தொல்லியல் திணைக்களம் செயற்பட வேண்டும். அரசியல் சார்பின்றி 100 வீதம் சுயாதீனமாக செயற்பட வேண்டும். வடக்கு – கிழக்கு பிராந்திய தொல்லியல் பிரிவு நிறுவப் பட்டு தமிழ் தொல்லியலாளர்களின் தலைமை யில் செயற்படுத்தப்பட வேண்டும். தமிழ்த் தொல்லியலாளர்களோ அரசியலாளர்களோ ஆயுத இயக்கங்களோ கூட இதுவரை தொல் லியல் இடங்களை, அடையாளங்களை, ஆதாரங்களை அழித்ததில்லை. பாதுகாத்தே வந்துள்ளனர்.

எனவே, தொல்லியல் திணைக்களம் தமிழ் கலாசார அழிப்பின் அங்கமாக இல்லாமல் இந்நாட்டின் உண்மையான வரலாறுகளை வெளிக்கொணரும் அமைப்பாக செயற்பட மேற்கண்ட மாற்றங்கள் அவசியமாகிறது. அரசியல் யாப்பில் பௌத்தத்திற்கு மிகுந்த முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை இத்தவ றுக்களுக்கான ஆணிவேராகும். குறைந்த பட்சம் வடக்கு – கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற வகையில் யாப்பில் திருத்தம் செய்வதும் தீவு முழுவதும் தொல்லி யல் எச்சங்கள் உரிய அடையாளங்களுடன், விளக்கத்துடன் வெளிப்படுத்தப்பட்டு வெளிப் படையாக பாதுகாக்கப்படுவதற்கான உரிய சட்டங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். வேர்களை விட்டு மரங்களை அறுப்பதால் மட் டும் தொல்லியல் அரசியலை முற்றாக நிறுத்தி விட முடியாது.















# இலங்கையில் கொல்லப்படும் தமிழ் மொழி

நிரோஜனி ராஜா

இலங்கைத் தீவானது பல்லினங்களை உள்ளடக்கிய பன்முகத்தன்மைகொண்ட ஒரு நாடு.பன்மைத்துவ பின்னணியில் தான் நாம் எல்லோருமே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.இவ்வாறான சூழ்நிலையில் எம் எல்லோருக்கும் சமமான உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பது எல்லோரினதும் நோக்கமும் கூட.ஆரம்ப காலப்பகுதிகளில் இருந்தே சிறுபான்மை இனங்களாக கருதக்கூடிய தமிழ் மக்கள் மொழி ரீதியான பல இன்னல்களை சந்தித்த வண்ணமேஉள்ளனர். மொழி ரீதியான முரண்பட்ட செயற்பாடுகளே இலங்கையில் இன்றுவரை இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. பல்லின சமூகமாக வாழ்கின்ற இந்நாட்டில் எல்லோருக்குமான உரிமைகளும் சட்டங்களும் சமமான முறையினிலேயே வழங்கப்பட வேண்டும்.

இலங்கையின் பிரதான மொழிகளாள தமிழ், சிங்களம் இரண்டுமே அரசகரும மொழிகள் தான். இலங்கையில் 20 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர்.இதில் பெரும்பான்மை இனத்தவர் சிங்களவர் 74.88 வீதமானவர்களாகவும் தமிழர்கள் 15.37 சதவீதமானவர்களாகவும்உள்ளனர்.

இதில் குறிப்பிடத்தகுந்த விடயம் என்னவென்றால் 74 சதவீதமான பெரும்பான்மை மக்களுக்கு தமிழ் மொழியும் அரசகரும மொழிதான் என்ற விடயம் தெரியாது உள்ளது அல்லது தெரியாதது போல புறக்கணிக்கிறார்கள் என்பதுதான். இதுதான் கவலைக்கிடமான விடயமே!அரசியலமைப்பில் மட்டும் தமிழும் அரசகரும மொழி என்று இருந்து என்ன பயன்?

இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் அத்தியாயம்(டிஎ)மொழி உரிமைபற்றிக் கூறுகின்றது.18 தொடக்கம் 25 வரையிலான உறுப்புரைகள் முற்று முழுதாக மொழியுரிமைப்பற்றி கூறுகின்றது.இதில் 18ம் (4/(1)) உறுப்புரையில் இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்; என்றும் 5/(2) உறுப்புரையில் தமிழும் அரசக்கரும மொழியாதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 19ம் சரத்தில் ‘இலங்கையின் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்’ என்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாக இருந்தாலும் நடைமுறையில் தமிழுக்கு எந்த அந்தஸ்தும் கொடுக்கப்படவில்லை. இது அனைத்து மக்களும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். பொதுவான இடங்களில் காணப்படக்கூடிய தமிழ் மொழியிலான பெயர்ப்பலகைகளில், அதுவும் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் கூட சிங்களம் முதலிலும் தமிழ் எழுத்துப் பிழை அல்லது கருத்துப் பிழையுடனும் எழுதப்பட்டிருப்பது மிகவும் மன வேதனையளிக்கும் விடயம். தமிழ் மொழியில் சொற்களின் எழுத்துக்கள் ஒன்று மாற்றம் அடைந்தாலே போதும், தர வேண்டிய கருத்தைத் தராமல் அதனுடைய கருத்து முற்றாக மாறிவிடும்.

பொது இடங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் போன்ற பல இடங்களில் தமிழ் மொழியிலான தவறான பிரதிபலிப்போடுகூடிய பெயர்ப்பலகைகளை நாளாந்தம் பார்க்க முடிகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாரும் இதனைத் திருத்தியமைக்க எந்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவில்லை.

இதனை எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்ப்பது?அரசியலமைப்பின் அடிப்படையில் சிங்கள மொழியினைப் போலவே தமிழும் அரசக்கரும




மொழியாகக் காணப்பட வேண்டும் எனக் கூறப்பட்டாலும் எந்த இடத்திலும் தமிழ் மொழிக்கான உரிய அந்தஸ்த்தைக் கொடுக்காமல் அலட்சியப்படுத்துவதைப் பார்க்க முடிகிறது.

நாட்டில் காணப்படக்கூடிய அரச சார்பான, அரசசார்பற்ற மற்றும் போக்கு வரத்து வாகனங்கள், பொதுவான இடங்கள் ஆகியவற்றில் மும்மொழியிலான பெயர்ப் பலகைகள் காணப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டாலும் அதில் தவறுகள் நிறைந்து காணப்படுகின்றன.இன்று சமூகஆர்வாளர்களால் பலதரப்பட்ட வகை யிலும் இம் மொழி உரிமை தொடர்பான விவாதங்கள் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுவதை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டேதான் உள்ளோம். பல்லினத்தவர் கள் வாழ்கின்ற சமூகத்தில் அனைவரும்




சமமானகண்ணோட்டத்தில் பார்க்கப்பட வேண்டும். அனைவருக்கும் சமமானதான சட்டமே வழங்கப்பட வேண்டும். இத்தனை வருடங்களாக மக்கள் பட்ட துன்ப துயரங் களுக்கும், அவர்கள் அடைந்த இழப்புக ளுக்கும் அதுதான் தீர்வாக அமையும்.

கடந்த காலங்களில் அரசபேருந்துகளில் தமிழ்மொழி எழுத்துப்பிழைகள் ஏற்படுத்தப் பட்டு ஊடகத்தலையீட்டின் மூலம் அவை சரிசெய்யப்பட்டன. 2014 ம் ஆண்டு 2ம் மாதம் 7ம் திகதிபத்திரிகையில் வெளியான தகவல் இது.அதாவது அரசப்பொதுப்பே ருந்து ஒன்றில் 'கர்ப்பிணித்தாய்மார்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ளது' என்பதனை 'கர்ப்பிணி நாய்மார்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது' எனக் எழுதியுள்ளனர். இது வேண்டுமென்றே செய்யப்பட்டதாகவும்

> **பொது இடங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் போன்ற பல இடங்களில் தமிழ் மொழியிலான தவறான பிரதிபலிப்போடு கூடிய பெயர்ப்பலகைகளை நாளாந்தம் பார்க்க முடிகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாரும் இதனைத் திருத்தியமைக்க எந்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவில்லை**

இருக்கலாம் அல்லது தமிழ் தெரியாதவர் கள் எழுதியதாகவும் இருக்கலாம். அன்று தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்த திரு.வாசுதேவநாணயக்கார அவர் கள் நிகழ்ந்த தவறுகளுக்காக வருந்தி, தவறை ஏற்றுக்கொண்டு சீரமைப்பதாக கூறினார். இது தொடர்பாக அன்றயகாலப் பகுதியில் பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்று அத்தவறு திருத்தப்பட் டாலும், இன்று வரை தொடரும் தவறுக ளுக்கு நிரந்தரத்தீர்வுகள் பெற்றுத்தராமை ஏன் என்பது கேள்விக்குறியே!

மொழி உரிமை தொடர்பாக விழிப் புணர்வை ஏற்படுத்தக் கூடிய கடமையின் பெரும்பகுதி ஊடகங்களையே சாரும். மொழி உரிமைகளைப்பாதுகாக்க கூடிய பொறுப்பும் ஊடகங்களுக்கே உண்டு. மொழி ரீதியான யாப்புச்சட்டங்கள் எவ்வா றானது என்பதுப்பற்றிய பூரண அறிவையும் மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டியது ஊடகங்களே.அரசுஇணங்கி வந்தாலன்றி நாங்கள் மட்டும் ஒன்றிணைந்து விடயங்களை மேற்கொள்ள முடியாது.அரசுத்தலையீடும் முற்றுமுழுதாகத்தேவை. மொழிகள் இரண் டாகக் காணப்பட்டாலும் அவற்றிற்கு சமமான மரியாதை வழங்கப்பட வேண்டும் என்பதை அரசுக்கு வலியுறுத்துவோம்.

இதுவரை காலமும் சிங்கள மொழி அரசகரும மொழியாகவும் தமிழ் மொழி புறக்க ணிக்கப்பட்டு இரண்டாம் இடத்திலும் காணப் பட்டது. இன்று தமிழ் மொழியின் இரண்டாம் நிலையும் பிடுங்கப்பட்டு அந்த இடத்தை சீன மொழி பிடித்துள்ளமை குறிப்பிடத் தக் கது. கொழும்பை அண்டிய பிரதேசங்களில் சீன மொழிப்பயன்பாடு அதிகமாகக் காணப் படுகின்றது.இதுவரையில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளால் காணப்பட்ட பெயர்ப்பலகைகள் இன்று தமிழ் மொழியைப் புறக்கணித்து சிங்களம், சீனம், ஆங்கிலம் என்றாகிவிட்டது. சில இடங்களில் சிங்கள மொழி இரண்டாவதாகவும் முதலி டத்தில் சீன மொழி எழுதப்பட்டிருப்பதையும் பார்க்கக் கூடியதாக உள்ளது. இந்தத் தீவில் சீன மொழிக்கு என்ன தேவை?

இலங்கை வாழ் அனைத்து பிரஜைகளுக்கும் சட்டங்களும் உரிமைகளும் சமமானதாகும். அனைவருக்குமே தனித்துவமான மொழி பண்பாடு கலாச்சார பின்னணி உண்டு. அனை வரையும் பெரும்பான்மை சிறுபான்மை என்ற பேதமின்றி சுதந்திரமாக நடத்த வேண்டிய தேவை பூர்த்தியாகும் போது இந்த நாட்டில் இனப்பிரச்சனை எழ வாய்ப்பில்லை.

இலங்கை மக்களுக்கிடையே சிறந்த தொடர்பாடல் கட்டியெழுப்பப்பட வேண் டும்.மும்மொழியும் முக்கியம் என எல்லா மக்களும் உணர வேண்டும். எல்லோருக்கும் இருமொழி அறிவு முக்கியமாகும். இதன்மூலம் மக்கள் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறான விடயங்களுக்கு ஏன் நிரந்தரத் தீர்வு எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை? ஒரு குறிப்பிட்ட பிரதே சத்திலோ அல்லது பொதுவான இடத்திலோ இவ்வாறான மொழி ரீதியிலான தவறுகள் மற்றும் புறக்கணிப்புக்கள் இடம்பெறும்போது மாத்திரம் நாம் குரல் கொடுக்கிறோமே தவிர அவற்றிற்கான நிரந்தர தீர்வை எம்மால் பெற் றுக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு கால மும் இவ் விடயங்களை சரியான முறையில் வெளிப்படுத்தாதது எம் குறையா?சற்று உற்று நோக்குவோமேயானால் கேள்விக்குறிகள் நீண்ட வண்ணமே செல்லும்.





# ரயில் பயணத்தின் இறுதி நிமிடங்கள்...

மூன்று ரயில்களின்
முறையற்ற சந்திப்பின்
முக்கோண விபத்து
உருக்குலைந்தது ஒடிசா
மாநிலத்தை மட்டுமல்ல..
முழு உலகையும் தான்…


அவுரா எக்ஸ்பிரஸ்
தவறாக மோதியதோ….
சரக்கு ரயில் வேகம் கொண்டு சீறி
வந்த கோர மண்டல் ரயிலை
வாரி அணைக்க நேரம் பார்த்ததோ…
உள்ளே இருந்த உயிர்களை
வெறும் சடலங்கள் ஆக்க
சதிதான் செய்ததோ…

தண்டவாளங்கள்
தன்னிலை அறியுமுன்
தடம் புரண்டது ஏனோ..
இரும்பு பெட்டிகள் சவபெட்டிகளாய்
மாறி எடுத்து போனது பல்வேறு
உயிர்களை மட்டுமல்ல…
அவர்களின் கனவுகளையும்
கற்பனைகளையும் தான்..
கைகள் கால்கள் என
உடல் பாகங்கள் ஆங்காங்கே
இரும்புக்கு இரையாக
மிகுதி பாகங்கள்
துடிக்கும் சத்தம்
ஒடிசா மாநிலத்தையே
உழுக்கி செல்கின்றது இன்னும்…

உயிர் தப்பியவர்கள்
மரணிக்கவில்லை..
ஆனால் மரண வாசல்
கடக்காமல் அவர்கள்
திரும்பவில்லை…
தன் பிள்ளை தேடும்
தாயும் தன் தாயை தேடும்
பிள்ளையும் என பல உறவுகள்
இருட்டுக்குள் இறந்து பிழைத்த
போராட்டம் மரண சரித்திரமே…



மாலினி
கொட்டகலை
(இலங்கை)



ஐங்கரன் விக்னேஸ்வரா

# வையகம் எழுச்சியுற தாய் நாவலை படைத்த மாக்சிம் கார்க்கி

**(உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற இலக்கியப் படைப்பாளி மாக்சிம் கார்க்கி ஜூன் 18 அன்று உயிர் நீத்த நாளாகும். உழைக்கும் மக்களுக்காக எழுச்சி விதைகளை விதைத்து, புதியதோர் உலகம் படைத்த கார்க்கியின் நினைவு நாள் ஜூன் 18 சர்வதேச இலக்கியப் பரப்பில் அனுஷ்டிக்கப்படுகிறது.)**

முற்போக்கு இலக்கியத்தில் கூடியளவு வாசிக்கப்பட்ட முதன்மையான நூல் மாக்சிம் கார்க்கியின் ‘தாய்’ என்றே கூறலாம். உலகம் வியந்த ‘தாய்’ நாவலை படைத்த மாக்சிம் கார்க்கி பரணி புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளர்கள் வரிசையில் முன் நிற்பவர்.

எழுச்சி விதைகளை விதைத்து, புதியதோர் உலகம் படைத்து புரட்சி படைத்திட்ட கார்க்கியின் கருத்தோவியம் தான் ‘தாய்’ எனும் எல்லா யுகங்களிலும் படிக்கப்படும் நாவல்.

உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற இலக்கியப்படைப்பாளியின் நினைவுநாள் சர்வதேச இலக்கிய பரப்பில் அனுஷ்டிக்கப்படுகிறது.

## கார்க்கியின் கருத்தோவியம் ‘தாய்’:

மேற்கத்திய தொழிற்புரட்சிக்குப் பின்னர் புதிய இலக்கிய வகைகளும் உத்திகளும் தோன்றின. தொழிற்சாலை முறை தோற்றுவித்த அவலங்கள் – சுரண்டல், வறுமை, பிணி, ஏற்றத்தாழ்வுகள், சமூகக் கொடுமைகள் பற்றிப் பாடல்களும், சிறுகதைகளும் புதினங்களும் வெளிவந்தன.

மத்திய காலத்தில் இத்தாலியில் லியனார்டோ –டா– வின்சி கண்ட மறுமலர்ச்சி இயக்கம் பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பரவிச் செல்வாக்குப் பெற்று ரஷ்ய நாட்டையும் பாதித்தது.

1648 இல் இங்கிலாந்திலும் 1789 இல் பிரான்ஸிலும் நடந்த புரட்சிகள் மிக முக்கியமானவை. அவை சமுதாயத்தில் பழைய அரசியல் அமைப்புமுறையை மாறிப் புதிய அமைப்புமுறை ஏற்பட வழிகோலின.

உலக மக்கள் முழுமைக்குமான உரிமைகளையும் கடமைகளையும் தேவைகளையும் வகுத்து வரையறை செய்ததோடு, மக்களது நாட்டம் அவற்றை அடைவதை நோக்கியே இருக்க வேண்டும் என்னும் நிலைமையை உருவாக்கின. இந்த நிலைமையே புதிய இலக்கியம் தோன்றுவதற்கு உந்து சக்தியாக வளர்ந்தது.


## தொழிற்புரட்சியும் எழுச்சியும் ;


இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட சமுதாய மாற்றங்களைப் பிரதிபலிக்க ஐரோப்பிய நாடுகளில் எல்லா மொழிகளிலும் இலக்கியங்கள் தோன்றின. இவை மக்களுடைய வாழ் நிலைகளை உள்ளது உள்ளவாறே எடுத்துக்காட்டின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹெகல் (HEGEL) என்னும் சிந்தனையாளர் சமுதாய மாற்றங்கள் கருத்துகள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு மோதுவதால் ஏற்படுகின்றன என்றார்.

ஆனால் அவரைப் பின்பற்றிய கார்ல் மார்க்ஸ் சமுதாய மாற்றங்கள் மக்கள் பிரிவினர். வர்க்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் விளைகின்றன. வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்கள் வரலாறே என்று சொன்னார். வரலாற்றைப் படைப்பவன் மனிதன், உழைப்பே மனிதனைப் படைப்பது என்று ஏங்கெல்ஸ் அறுதியிட்டுச் சொன்னார்.

இப்புதிய சிந்தனை ஐரோப்பாக் கண்டம் முழுவதும் காட்டுத் தீ போல உழைப்பாளரிடையே பரவிற்று. முதலாளித்துவம் சோஷலிசம் என்னும் வாதங்களும் பிறந்தன.மார்க்சியம்





உழைக்கும் வர்க்கத்தையும் சிந்தனையாளர்களையும் இலக்கிய படைப்பாளிகளையும் ஈர்த்தது. மக்சீம் கார்க்கி இவர்களில் ஒருவர்.

மக்சீம் கார்க்கி 1868 மார்ச் 28ஆம் நாள் ரஷ்யாவில் நிஜினி நோவோகார்டு என்னும் இடத்தில் பிறந்தார். இவருடைய இயற் பெயர் அலக்ஸி என்பதாகும். இவருடைய தந்தையார் ஒரு தச்சர். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். தாயும் மறுமணம் செய்து கொண்டார். எனவே அலக்ஸி தம் தாய்ப் பாட்டியால் வளர்க்கப்பட் டார். இதனால் வாழ்நாள் முழுதும் பாட்டியிடம் பாசமும், பரிவும், நன்றியும் காட்டி வந்தார், இவரை வளர்த்து ஆளாக்கிய பெருமை பாட்டிக்கு உரியது.

1879-ல் அவருடைய தாய் இறந்தார். சிறு பையனாக இருந் தபோதே பல பணிகளைச் செய்ய வேண்டியவரானார். முதலில் காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தார். ஓர் ஆண்டுக்குப் பிறகு கட்டட ஒப்பந்தகாரரிடம் வேலை செய்தார். வேலை கடினமாக இருந்ததால் தப்பி ஓடி டோப்ரி என்னும் பயணக் கப்பலில் வேலைக்குச் சேர்ந்தார். கப்பலில் சமையல்காரராக இருந்த மிகைல் அகிமோவிச் என்பவர் அவருக்குப் புத்தகங்கள் படிப்பதற்கு ஆர்வம் ஊட்டினார். கோகோல், ஹேன்றி பீல்டிங் முதலான நாவல் ஆசிரியர்கள் அறிமுகமானார்கள்.

இதற்குப் பின் டுமாஸ், டெர்ரெல்கெஸ்டாவ், மாண்டிபன், லெர் மான்டொவ், தாஸ்தாவ்ஸ்கி, டால்ஸ்டாய், துர்க்கனேவ், டிக்கன்ஸ், ஆண்டான் செகாவ் முதலானோரின் படைப்புகளைச் சிறிது காலத் திலேயே படித்து முடித்தார். அவை எழுந்த காலப்பின்னணி சமுதா யக் கொடுமைகள் அடக்கு முறைகள் துன்ப துயரங்கள் நிரம்பியது. எனவே இயல்பாகவே அலக்ஸி இடர்ப்பட்ட மக்கள் பக்கம் நின்றார்.

சோஷலிச கம்யூனிச கருத்துகள் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பரவி உறக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பின.

## ஜார் மன்னனின் கொடுமை ;

ரஷ்யாவை ஆண்ட ஜார் மன்னன் மக்களுக்குக் கொடுமை இழைப் பதை ஒரு பெருமையாகவே கருதினான். எதேச்சதிகாரமும் கொடுங் கோன்மையும் அடக்குமுறையும் ஜார் மன்னனுக்கு கைவந்த கலை.இலக்கிய வாசிப்பு படிப்பு - பயிற்சி அவருடைய அறிவைக் கூராக்கியது. சிந்தனையை விரிவாக்கியது. அவரும் எழுதத் தொடங் கினார்.

இதற்கு முன் தன் வாழ்க்கையில் நேரிட்ட துன்பதுயரங்களையும் இழிவுகளையும் நினைத்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். உடலில் குண்டு பாய்ந்தும் பிழைத்துக்கொண்டார்.

பின் பல வேலைகளில் உழன்று, 1889 ஆம் ஆண்டு மாஸ்கோ சென்று லியோ டால்ட்டாயைச் சந்திக்க முடியாமல் திரும்பினார். கொரலென்கொ என்னும் புகழ்மிக்க எழுத்தாளரைச் சந்தித்துத் தாம் எழுதிய கவிதையைப் பரிசீலிக்கத் தந்தார், 1891-ஆம் ஆண்டு ரஷ் யநாடு முழுவதும் முக்கிய இடங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து வந்தார்.

இடையில் அவருடைய 'கன்னியும், மரணமும்' என்னும் கவிதை வெளிவந்தது. தொடர்ந்து பல கவிதைகளும் சிறுகதைகளும் புதினங்களும் எழுதினார். அவருடைய பெயரும் மக்சிம் கார்க்கி என்றாயிற்று. இதுவே உலகம் முழுவதும் புகழ்பெற்று நிலைபெறு வதாயிற்று, கார்க்கி என்பதற்குக் கசப்பு என்பது பொருள்.

## கார்க்கியின் வாழ்க்கைத் துணை :

1896ஆம் ஆண்டு அச்சுப்பிழை திருத்துவதில் துணைவராக இருந்த ஏகடரினா பவ்லோவ்னா வால்ழினா என்னும் பெண்மணியை வாழ்க் கைத் துணைவியாகத் தேர்ந்தெடுத்தார். 1898ல் 'படங்களும் கதைக ளும்' தொகுதிகள் வெளிவந்தன, அவர் டிப்லிஸ் நகரில் இருந்தபோது சமூக ஜனநாயக அமைப்புடன் தொடர்புகொண்டு இருந்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். புகழ்பெற்ற வரலாற்றாளர் கிப்பன்ஸ் (Gibbons) என்பவருடைய ரோமானியப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச் சியும் என்னும் நூலைப் படித்தார். சிறையில் இருந்து விடுதலையான பின்னர் தொடர்ந்து காவல்துறையின் கண்காணிப்பில் இருந்தார்.


1899ல் அவருடைய 'பாமா கோர்தயேவ்' என்னும் நாவல் வெளிவந்தது. 1990ல் லியோடால்டாயைச் சந்தித்துக் கருத்து பரிமாறிக்கொண்டார். 1901ஆம் ஆண்டு புரட்சி இயக்கத்தில் மிக தீவிரமாகப் பங்குபெற்றார். அறிவியல் கழகம் அவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டது 'பெட்டிபூர்ஷ்வா' என்னும் நாவல் 1902இல் வெளிவந்தது.

தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக அரசு அவரை அர்சமஸ் நகருக்கு கடத்திற்று. 'சோர்மோவோ' தொழிலாளர்கள் கிளர்ச்சியில் பங்கு பெற்றார். நிஜினி நோவோகார்டில் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் தீவிரமாக நடைபெற்றது. அதே ஆண்டு மாஸ்கோ கலையரங்கில் அவருடைய 'அடிஆழம்', 'கோடை மக்கள்' என்ற நாவல்கள் நாட கமாக அரங்கேற்றப்பட்டன. 1903ல் தீவிர பொல்ஷிக் அனுதாபி ஆனார்.

## தொழிலாளர்களின் ரஷ்யப்புரட்சி :

1905ல் போராட்டத்தில் திரண்டிருந்த தொழிலாளர்களுக்கும் ஜார் படைவீரர்களுக்கும் இடையே மோதல் ஏற்படும் என்று அஞ்சி ரெட் ஸென்ஸ்கி என்னும் உள் விவகாரத் துணை அமைச்சரிடம் அறிவா ளிகள் குழுவுக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்று விண்ணப்பம் தந்தார். அது தோல்வியில் முடிந்தது. போலிஸ் காவலர்கள் தொழி லாளர்களை நரவேட்டை ஆடினார்கள், இதனை 'ரத்த ஞாயிறு' என்பர். அது கார்க்கியை மேலும் தூண்டிற்று. இதனால் பலமுறை சிறைப்பட்டார். சிறையில் 'கதிரவன் குழந்தைகள்' எழுதினார். 1905ஆம் ஆண்டில் போல்ஷிவிக் கட்சி உறுப்பினரானார்.

ரஷ்யப்புரட்சி நிலைமையை அமெரிக்க மக்களுக்கு விளக்கிச் சொல்ல 1906ஆம் ஆண்டு போல்ஷிவிக் கட்சி கார்க்கியை அமெரி க்காவுக்கு அனுப்பியது. மனைவி உடன்வர அமெரிக்கா சென்றார். அமெரிக்காவிலிருந்த ரஷ்யப் பிரதிநிதியும் ஜாரின் அடிவருடி களும் அவரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர். பலிக்கவில்லை, எச்.ஜி.வெல்ஸ், எர்னஸ்ட் ரூதர்போர்டு, வில்லியம் ஜேம்ஸ் தொடர்பு




கிடைத்தது. இதன் விளைவாக கார்க்கி நாடு திரும்பிய பின் ஆப்பிள்டன் மேகஜின் 'தாய்' தொகுதி வெளியிட்டது.

1907இல் போல்ஷிவிக் கட்சியில் ஐந்தாவது காங்கிரஸில் பங்கு பெற்றார். 'தாய்' முழுதும் வெளிவந்தது. 1908 முதல் கார்க்கி லெனின் தொடர்பு வலுவடைகிறது.'ஒப்புதல்', 'கழிக்கத் தகுந்தவன்' என்னும் புதினங்கள் வெளிவந்தன. 1909இல் கார்க்கியின் படைப்புகள் ரஷ்யமக்கள் – உழைக்கும் வர்க்கங்கள் எழுச்சிக்குப் பெரும் துணை செய்து வருகின்றன என்று லெனின் கார்க்கியை மனமாரப் பாராட்டிக் கடிதம் வரைந்தார்.

## மகத்தான அக்டோபர் புரட்சி:

1909ஆம் ஆண்டு ரஷ்யா உழைப்பாளிகளுக்குக் கேப்ரி [இத்தாலி] யில் பயிற்சிப்பள்ளி தொடங்குவதற்கு முயற்சி மேற்கொண்டார். 'ஒகுராவ், சிறுபட்டணம்' என்னும் புதினமும் 'கோடை' என்னும் சிறுகதையும் வெளியாயின.

1910 இல் போல்ஷிவிக் கட்சியின் மிக முக்கியமான தலைவரான ஷெர்சின்ஸ்கியைச் சந்தித்து உரையாற்றினார். ஷெர்சின்ஸ்கி தம் நண்பருக்கு வரைந்த கடிதத்தில் எடுத்த எடுப்பிலேயே–முதல் சந்திப்பிலேயே – கார்க்கி தம்மைக் கவர்ந்துவிட்டதாயும், அவருடைய மனத்தூய்மையும் உறுதியும் வியப்பளித்ததாயும் எழுதினார், 'மாட்வி கொழும்கின் வாழ்க்கை' என்ற புதினம் பெர்லினில் வெளிவந்தது.

மகத்தான அக்டோபர் புரட்சிக்கு முன் பல இலக்கியங்கள் வெளிவந்தன. 1915இல் புரட்சிக் கவிஞர் மாயகோவ்ஸ்கி இவரைச் சந்தித்து நண்பரானார்.

1917, 1921ல் புரட்சி முடிந்து, சில ஆண்டுகளில் லெனின் – கார்க்கி உறவு வலுப்பட்டதோடு சில தகராறுகளும் ஏற்பட்டன. கார்க்கி அறிவாளிகளிடையே ஏற்பட்ட புரட்சிகர உணர்வுகளைப் பெரிதும் மதித்தார். அதேபோது அந்த அறிவாளி வர்க்கம் தொழிலாளர் – விவசாயிகள் எழுச்சியையும் புரட்சி வேகத்தையும் கண்டு அதிர்ந்தது.

இக்காலக்கட்டத்தில் கார்க்கி எடுத்த சில தவறான நிலைப்பாடுகளை லெனின் திருத்தினார். கார்க்கியை லெனின் அதிகமாக மதித்தார், நேசித்தார். ஆனால், அதேபோது அவருடைய பிழைகளைத் திருத்தத் தயங்கியதுஇல்லை. கார்க்கி உடல் நலமிழந்தபோது லெனின் சிகிச்சைக்காக பின்லாந்துக்கும் ஜெர்மனிக்கும் செல்ல ஏற்பாடுகள் செய்தார். 1923 இல் 'என் பல்கலைக்கழகங்கள்','காவலாளி','முதல் காதல்' வெளிவந்தன.

## லெனின் நினைவுக் குறிப்புகள் :

1924இல் லெனின் மறைந்தார். லெனின் வாழ்க்கை பணி பற்றிய நினைவுக் குறிப்புகளை கார்க்கி உணர்வு பொங்க எழுதினார். அவர் சிலகாலம் இத்தாலியில் வசிக்க வேண்டிஇருந்தது. அப்போது வி. ஐ. லெனின் என்னும் அவருடைய நூல் வெளிவந்தது. 1925–27 இல் 'அசாதாரணம் பற்றிய கதை', 'ஆர்ட்டமனாவ்,'செர்ஜீ ஏசனின்', 'கிளிம்சம்கின் வாழ்க்கை' ஆகிய நூல்கள் வெளிவந்தன.

1928 மார்ச் 28 கார்க்கி அறுபது ஆண்டு நிறைவு, உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பாராட்டுக் கடிதங்கள் குவிந்தன.இத்தாலியிலிருந்து சோவியத் நாடு திரும்பி வந்து சேர்ந்தார்.முதலில் லெனின் நினைவாலயம் சென்று மரியாதை செலுத்தினார். இலக்கியப்பணியில் ஆழ்ந்தார். செய்தித்தாள்களிலும், இலக்கிய இதழ்களிலும் கட்டுரைகள் எழுதிக் குவித்தார்.

1930 நவம்பர் 15இல் 'பிராவ்தா'வில் அவர் எழுதிய 'பகைவன் பணியவில்லை என்றால், அவன் அழிக்கப்பட வேண்டும்' என்னும் கட்டுரை பிற்காலத்திலேபாசிசத்தை எதிர்த்து நடைபெற்ற இரண்டாவது உலகப்போர்க் காலத்தில் சோவியத் மக்களைத் தட்டி எழுப்பத் துணை செய்தது.


1933–ல் வெளிவந்த 'சோஷலிச எதார்த்தவாதம்' என்னும் கட்டுரை, புதிய இலக்கியச்சிந்தனை உத்திக்கு அடிக்கல் நாட்டிற்று. 1934 இல் சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் பதினேழாவது காங்கிரசில் சிறப்புப்பிரதிநிதியாகப் பங்கு பெற்றார். ஆகஸ்டு 17 அன்று அனைத்து சோவியத் எழுத்தாளர்கள் மாநாட்டுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'சோவியத் இலக்கியம்' என்னும் தலைப்பில் வழிகாட்டி உரையாற்றினார்.

## பாட்டாளி வர்க்க இலக்கியவாதி :

1935 ஆம் ஆண்டு ரோமெய்ன் ரோலண்டும் அவர் மனைவி மரியா பாவ்லோவ்னாவும் சோவியத் நாடு வந்து, சிலகாலம் கார்க்கியுடன் தங்கினார்கள். கார்க்கியின் படைப்புகள் மீண்டும் மீண்டும் அச்சாயின. 1936இல் கார்க்கி நோய்வாய்பட்டார். குடும்பத்தினர் கட்சியினர் முழு அக்கறைகாட்டியும் ஜூன் 18 அன்று காலை 11மணிக்கு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற இலக்கியப் படைப்பாளி உயிர் நீத்தார்.

எழுச்சி விதைகளை விதைத்து
புதியதோர் உலகம் படைத்த
கார்க்கியின் நினைவுநாள் சர்வதேச இலக்கிய பரப்பில் அனுஷ்டிக்கப்படுகிறது.

# வாழ்க்கை



ஸ்வேதா என்பவர் 10 கிலோ மீட்டர் தூரத்தை கடப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டார். ஆகாஷ் என்பவர் அதே தூரத்தை கடப்பதற்கு ஒன்றரை மணி நேரம் எடுத்துக்கொண்டார்.

இவர்களில் யார் வேகமானவர் மற்றும் ஆரோக்கியமானவர் என்று கேட்டால் நிச்சயமாக நமது பதில் ஸ்வேதா என்றுதான் வரும்.

எனினும் இப்பொழுது ஸ்வேதா என்பவர் நன்கு பண்படுத்தப்பட்ட சாலையில் அந்த தூரத்தைக் கடந்தார் என்றும் ஆகாஷ் என்பவர் கரடுமுரடான பாதையில் அதைக் கடந்தார் என்றும் நான் சொன்னால் இப்பொழுது உங்களுடைய பதில் மாறும் அல்லவா?

ஆம்! நிச்சயமாக இப்பொழுது ஆகாஷ் தான் வேகமானவர் என்று சொல்லுவோம்!

மறுபடி இப்பொழுது ஸ்வேதாவுக்கு 50 வயது என்றும் ஆகாஷுக்கு 25 வயது என்றும் கூடுதல் தகவலை நான் கொடுக்கும் பொழுது........உங்களுடைய பதில் மறுபடி மாறும் அல்லவா?ஆமாம்! இப்போது ஸ்வேதா தான் வேகமானவர் என்று சொல்லுவோம்.

மேலும் ஆகாஷ் என்பவருடைய எடை 140 கிலோ என்றும் ஸ்வேதாவின் எடை 65 கிலோ தான் என்று நான் சொல்லும்போது மீண்டும் இந்த பதில் மாறும். இப்பொழுது ஆகாஷ் தான் வேகமானவர் என்று சொல்லுவோம்!

இதேபோல ஆகாஷ் பற்றியும் ஸ்வேதா பற்றியும் நம்முடைய இந்த முடிவானது அவர்களைப் பற்றிய அதிகத் தகவல்கள், கூடுதல் தரவுகள் கிடைக்கக் கிடைக்க மாறிக்கொண்டே இருக்கும்.

இதுதான் வாழ்க்கையிலும். நாம் ஒவ்வொருவரைப் பற்றியும் மிக வேகமாக நம்முடைய அபிப்பிராயங்களை உருவாக்குகிறோம்.

அவர்களோடும், அவர்களின் செயல்பாடுகளோடும் நம்மை ஒப்பிடத் தொடங்குகின்றோம். இதனால் நாம் நமக்கு நாமே தீங்கு விளைவித்துக் கொள்கின்றோம்.

வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாகும். ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் வேறுபட்டதாகும். ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கும் அறிவும் பொருளும் வேறாக இருக்கலாம். ஒவ்வொருவரும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வேறாக இருக்கலாம்.அதற்கான தீர்வுகள் கூட வேறாக இருக்கலாம்!

எனவே வாழ்க்கை என்பது வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றாகும்.

அதைத் தேவையில்லாமல் மற்றவர்களோடு ஒப்பிட்டு வீணாக்கிக் கொள்ளாதீர்கள்.

நீங்கள் தான் உயர்ந்தவர்கள்!

நீங்கள் தான் சிறந்தவர்கள்!!

உங்களுடைய முழு சக்தியையும் ஆற்றலையும் பிரயோகிக்க கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய சூழ்நிலைகளுக்கு தகுந்தவாறு முடிவுகளை எடுத்து முன்னேறுங்கள்!! எப்போதும் ஆரோக்கியமாக இருங்கள்! இயல்பாக சிந்தியுங்கள்!புன்னகையைப் படரவிடுங்கள்!!மனம்விட்டு சிரிக்கப் பழகுங்கள்!!!



# ஆபத்துகள் நிறைந்த டைட்டானிக்

## டைட்டானிக் கப்பலை சுற்றி இத்தனை ஆபத்துகளா?; ஆய்வாளர்களின் திகில் நிறைந்த ஆழ்கடல் பயண அனுபவம்

டைட்டானிக் கப்பலை தேடிச் சென்ற 'டைட்டன் நீர்மூழ்கியின்' உள்ளிருந்தே வெடிப்பு நிகழ்ந்து விபத்திற்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்துள்ளது.அதில் பயணித்த 5 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கடலின் மேற்பரப்பிலிருந்து 4000 மீட்டர் ஆழத்திற்குச் செல்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல.அங்கே பல அசம்பாவிதங்கள் நடக்கலாம்.மிகக் குறிப்பாக டைட்டானிக் கப்பலின் சிதைவுகள், அட்லாண்டிக் பெருங்கடலில் 3800 மீட்டர் ஆழத்தில் பொதிந்து கிடக்கின்றன.

அத்தனை பெரிய ஆழத்திற்குள் சூரிய ஒளிகளால் ஊடுருவ முடியாது. இதனால் இப்பகுதியை "midnight zone' என்று அழைக்கின்றனர்.ஆனால் டைட்டானிக் சிதைவுகள் இருக்கும் பகுதிக்குச் செல்வதில் இருள் மட்டுமே சவாலாக இருக்கிறது என்று கூற முடியாது.

காரிருளையும் விட பயங்கரமான ஆபத்துகள் அங்கு இன்னும் என்னென்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

ஆபத்தை விளைவிக்கும் பனிப்பாறைகள் கடந்த 1911ஆம் ஆண்டு, கிரீன்லாந்தின் தென்மேற்குப் பகுதியில் இருந்த பெரிய பனிப்பாறையிலிருந்து, ஒரு பெரிய பனிக்கட்டி உடைந்து மிதக்கத் துவங்கியது. அது மெதுவாக தெற்கே நகர்ந்து படிப்படியாகக் கரைந்தது.

ஓராண்டிற்குப் பிறகு, சௌதாம்ப்டன் நகரிலிருந்து, நியூயார்க்




நோக்கி தனது பயணத்தைத் துவங்கியிருந்த டைட்டானிக் கப்பல் அவ்வழியாக வந்துகொண்டிருந்தது.அப்போது கிரீன்லாந்திலிருந்து உடைந்த பனிப்பாறையில் எஞ்சியிருந்த பகுதிகள் அனைத்தும் இந்த டைட்டானிக் கப்பல் மீது மோதின.

நிலவு இல்லாத ஒரு கடும்குளிர் இரவில் 1912ஆம் ஆண்டு, ஏப்ரல் 14ஆம் தேதி இந்த விபத்து நேர்ந்தது. டைட்டானிக் கப்பல் மீது மோதிய அந்தப்பனிப்பாறையின் அளவு சுமார் 1600அடி இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டது.விபத்து நேர்ந்த 3 மணி நேரத்திற்குள், டைட்டானிக் கப்பல் முழுவதுமாக கடலுக்குள் மூழ்கியது. அப்போது கப்பலில் 1500 பயணிகள் இருந்தனர்.

இந்த பிரமாண்ட டைட்டானிக் கப்பல், தற்போது கடலின் அடி ஆழத்திற்குள் பொதிந்து கிடக்கிறது.கடலின் மேற்பரப்பிலிருந்து சுமார் 3.8கி.மீ ஆழத்தில் டைட்டானிக்கின் சிதிலங்கள் இருக்கின்றன.



டைட்டானிக்கின் இந்த சிதிலமடைந்த பகுதிகள் கனடாவின் நியூஃபவுன்ட்லாண்ட் கடற்கரையிலிருந்து 640கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

அங்கே இருக்கும் பனிப்பாறைகள், இன்றும் கப்பல் போக்குவரத்திற்கு ஆபத்து விளைவிக்கின்றன.2019ஆம் ஆண்டில், மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான மாதங்களில் 1,515 பனிப்பாறைகள் தெற்கே அட்லாண்டிக் கடற்பகுதியில் நுழைவதற்குப் போதுமான அளவு நகர்ந்துள்ளன.

ஆனால் இது எல்லாவற்றையும்விட, தற்போது டைட்டானிக் கப்பல் சிதைந்து கிடக்கும் பகுதியே பெரும் ஆபத்தான பகுதியாக மாறியுள்ளது. அதாவது உலகின் மிகப்பெரும் கப்பல் விபத்தாகக் கருதப்படும் டைட்டானிக் விபத்தே, தற்போது மற்ற கப்பல் போக்குவரத்துக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

ஓஷன்கேட் நிறுவனத்திற்குச் சொந்தமான 'டைட்டன் நீர்மூழ்கி', அதில் பயணித்த 5 பேருடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை காணாமல் போனது. இதற்கான தேடுதல் பணிகள் நடந்து வந்த நிலையில், வியாழனன்று அமெரிக்காவின் கடலோர காவல் படை, டைட்டன் நீர்மூழ்கி விபத்திற்குள்ளானதாக அறிவித்துள்ளது.

'ஆளில்லாத ரோபோடிக் நீர்மூழ்கி', டைட்டனின் சிதறிய பாகங்களை நீருக்கடியில் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்க கடலோர காவல் படையினர் கூறினர்.

'டைட்டன் நீர்மூழ்கி' வெடித்துச் சிதறியுள்ளது என்றும், டைட்டானிக் தளத்தைச் சுற்றியுள்ள குப்பைகளுக்கு மத்தியில் டைட்டன் நீர்மூழ்கியின் ஐந்து பெரிய துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இது நீர்மூழ்கியின் அழுத்த அறை வெடித்திருப்பதைக் காட்டுவதாகவும் அமெரிக்க கடலோர காவல் படை கூறியுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்படுமா என்பது குறித்து உறுதியாக எதுவும் கூற முடியாது எனவும் கடலோர படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆழ்கடல் பயணம் எப்படியிருக்கும்?

பொதுவாகவே ஆழ்கடல் பகுதி மிகவும் இருட்டாகக் காணப்படும். கடலின் மேற்பரப்பில் சூரிய ஒளி தண்ணீரால் வேகமாக உறிஞ்சப்படுகிறது. இதன் காரணமாக சூரிய ஒளியால் 1000 மீட்டர்களுக்கு மேல் ஊடுருவ முடியாது.

இந்தக் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால், கடலில் அடர் இருள் நிலவும். இதை "mid-night zone' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறார்கள்.இதற்கு முன்னால் டைட்டானிக் மூழ்கியுள்ள பகுதிக்குப் பயணம் மேற்கொண்டவர்கள், கடலின் ஆழத்தில் இறங்கிய பிறகு அங்கே எப்படியான சூழல் நிலவும் என்பது குறித்து விவரித்துள்ளனர்.

'இருள் நிறைந்த பகுதிக்குள் நீர்மூழ்கி இறங்கியதும், அதன் விளக்குகள் ஒளிரச் செய்யப்படும். ஆனால் அதன்மூலம் குறிப்பிட்ட தூரம் வரையிலும்தான் நம்மால் பார்க்க முடியும். மேலும் அத்தனை பெரிய ஆழத்தில் எளிதாக வழி மாறவிடவும் அதிகமான வாய்ப்புகள் உள்ளன' ஆனால் அதேநேரம், பல ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டு வரும் டைட்டன் கப்பலின் சிதலமடைந்த கப்பல் குறித்து வழங்கப்பட்டிருக்கும் தெளிவான வரைபடம், அங்கே செல்பவர்களுக்கு ஓரளவு பயனுள்ளதாக இருக்கும். அதேபோல் நீர்மூழ்கியைச் சுற்றியுள்ள அம்சங்களையும், பொருட்களையும் கண்டறிய சோனார் கருவி உதவி புரியும்.

ஆழ்கடலுக்குள் பயணிக்கும் கப்பல் பைலட்கள், இயக்க ஊடுருவல் வழிசெலுத்தும் முறை (inertial navigation) என்ற தொழில்நுட்பத்தை நம்பி இருக்கின்றனர். அவர்கள் பயணிக்கும் திசை குறித்து அறியவும், தொடக்க நிலையிலிருந்து அவர்களின் வேகத்தைக் கணித்துக் கொள்ளவும் இது உதவுகிறது.


தற்போது விபத்துக்குள்ளாகியிருக்கும் 'டைட்டன் நீர்மூழ்கியும்' இதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதாக ஓஷன்கேட் நிறுவனம் கூறியுள்ளது. மேலும் அதில் ஒலியியல் சென்சார்கள் (Acoustic sensor) பொருத்தப்பட்டிருந்ததாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் எத்தனை வசதிகள் இருந்தாலும், கடலின் ஆழத்திற்குள் சென்றுவிட்ட பிறகு, அங்கே சரியான வழிதடங்களைக் கண்டறிவது கடினமாகத்தான் இருந்தது என 'டைட்டன் நீர்மூழ்கியில்' பயணம் செய்த முந்தைய பயணிகள் தெரிவித்துள்ளனர்.

## கடலின் ஆழத்தில் மாறுபடும் அழுத்தம்:

கடலின் ஆழத்திற்கு நாம் செல்லச் செல்ல, அங்கே அழுத்தங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால், கடலுக்கு அடியில் 3800மீட்டர் ஆழத்தில் கிடக்கும் டைட்டானிக் சிதலங்கள் இருக்கும் பகுதியில், கடலின் மேற்பரப்பில் இருப்பதைவிட 390 மடங்கு அதிகளவு அழுத்தங்கள் இருக்கும்.

'இது ஒரு கார் டயரில் இருப்பதைவிட 200 மடங்கு அதிகளவு அழுத்தத்தைக் கொண்டது'





என ராபர்ட் ப்ளைஸ்கி கூறுகிறார். இவர் பெருங்கடல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருபவர்.

'இத்தனை பெரிய அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில், தரமான அடர்த்தியான சுவர்களைக் கொண்ட நீர்மூழ்கிகளைப் பயன்படுத்த வேண்டும்' எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

'கார்பன் மற்றும் டைட்டானியத்தால் உருவாக்கப்பட்ட டைட்டன் நீர்மூழ்கியின் சுவர்கள், 4000 அடி ஆழத்திலும் உள்ள அழுத்தங்களை சமாளிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## நீரோட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கம்:

பொதுவாகவே கடலின் மேற்பரப்பில் உள்ள நீரோட்டங்கள் குறித்து நாம் நன்கு அறிந்திருப்போம். படகுகளையும், நீரில் நீந்தும் மனிதர்களையும் தூக்கி எறியக்கூடிய வகையில் வலுவான நீரோட்டங்களைக் கூட நாம் பார்த்திருப்போம்.

கடலின் ஆழத்தில் இருக்கும் நீரோட்டங்கள், மேற்பரப்பில் காணப்படும் அளவிற்கு வலிமையானதாக இல்லை என்றாலும் கூட, அவை பெரிய அளவிலான நீரின் இயக்கத்தை உள்ளடக்கியிருக்கும்.காற்று, அலை மற்றும் நீரின் அடர்த்தியில் உள்ள வேறுபாடுகளால், வலுவான நீரோட்டங்களில் அங்கே மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், கடலில் மூழ்கிக் கிடக்கும் டைட்டானிக் கப்பல் பகுதியில் நிலவும் நீரோட்டங்கள் குறித்து சில தகவல்கள் தெரிய வருகின்றன.கடலில் மூழ்கியுள்ள



டைட்டானிக் கப்பல் இரண்டு பாகமாகப் பிளந்து கிடக்கிறது. சிதைந்து கிடக்கும் அதன் வடிவங்கள் மற்றும் அதைச் சுற்றி இருக்கும் ஸ்குவிட்களின் (Squid) இயக்கத்தின் மூலம் அந்தப் பகுதியில் உள்ள நீரோட்டங்கள் குறித்துத் தெரிய வந்துள்ளன.

மேற்கு எல்லைப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கிப் பாயும் குளிர்ந்த நீரோட்டங்களுக்கு இடையில் டைட்டானிக்கின் சில பாகங்கள் காணப்படுகின்றன. இதை "Under current' எனக் குறிப்பிடுகின்றனர்.

அதேபோல், கடலின் அடிப்பகுதியில் உள்ள வண்டல்கள், 'சிற்றலைகள், இடம் பெயர்ந்த குன்றுகள் மற்றும் ரிப்பன் போன்ற சுழல்களையும் உருவாக்குகிறது. இதை 'கடலடி நீரோட்டம் (Bottom Current)' என்று குறிப்பிடுகின்றனர்.

ஆனால் டைட்டானிக்கின் முக்கிய சிதிலங்கள் இருக்கும் பகுதியில், நீரோட்டங்கள் வடமேற்கிலிருந்து, தென்மேற்கு நோக்கிப் பாய்கின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். டைட்டானிக் சிதிலங்களின் மிகப்பெரிய பாகங்கள் நீரோட்டத்தின் திசையை மாற்றுவதால் இந்த வேறுபாடு இருக்கலாம் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் இந்த நீரோட்டங்களின் தொடர் இயக்கம், காலப்போக்கில் டைட்டானிக் பாகங்களை கடல் மண்ணில் புதைத்து விடும் எனப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த அளவு இந்த நீரோட்டங்களின் தாக்கம் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

'அதேநேரம் இந்த நீரோட்டங்கள் அவ்வளவு ஆபத்தானது அல்ல என்றும், ஒரு நீர்மூழ்கியைத் தாக்கும் அளவிற்கு அவை சக்தி வாய்ந்தவை அல்ல என்றும் ஜெர்ஷார்ட் சீஃபர்ட் கூறுகிறார்.

இவர் ஓர் ஆழ்கடல் தொல்லியலாளர். டைட்டானிக் சிதைவுகளை உயர்தர தெளிவுதிறனில் காட்சிப்படுத்துவதற்காகச் சென்ற ஆழ்கடல் பயணத்திற்கு இவர் தலைமை தாங்கினார்.'எங்கள் பயணத்தில், இந்த நீரோட்டங்கள் டைட்டானிக்கை மேப்பிங் செய்வதில் சவாலாக இருந்ததே தவிர, எந்த வகையிலும் பாதுகாப்பிற்கு ஆபத்தானதாக இருக்கவில்லை' என்று அவர் குறிப்பிடுகிறார்.

## வண்டல்களும் சிதைவுகளும்:

கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக கடலின் தரைப்பகுதியில் கிடந்ததால், டைட்டானிக் கப்பல் துருப்பிடித்துச் சிதற ஆரம்பித்துவிட்டது.இதன் காரணமாக ஒரு நீர்மூழ்கிக் கப்பல் அதற்கு அருகில் போனால், அது சிதிலங்களின் மீது மோதக்கூடும் அல்லது அவற்றில் சிக்கிக்கொள்ளக்கூடும். அதே போல கடந்த 40 ஆண்டுகளில், டைட்டானிக் சிதைவுகளின் மீதுள்ள பாக்டீரியாக்கள் அதிகரித்திருப்பதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் ஏற்படும் அரிப்புகள் காரணமாக, டைட்டானிக் சிதைவுகள் மேலும் மோசமடைந்து வருவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். அதேபோல், கடலுக்கு அடியில் கிடக்கும் வண்டல் மண் பாய்ச்சல்களினாலும் அங்கே சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது மிகவும் அரிதாக நடக்கக்கூடிய நிகழ்வு என்றாலும், கடந்த காலங்களில் இத்தகைய நிகழ்வுகள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.



பூகம்பங்கள், நில அதிர்வுகள் நிகழும் நேரங்களில், இந்த வண்டல் மண் பாய்ச்சல் தூண்டப்படுகிறது.இந்த நிலையில், டைட்டானிக் கப்பலை சுற்றியுள்ள நிலப்பரப்பு கடந்த காலங்களில், நீருக்கடியில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் தாக்கப்பட்டிருக்கும் அறிகுறிகளைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கு முந்தைய பேரழிவு நிகழ்வுகள், அங்கே 100 மீட்டர் தடிமன் அளவிற்கு வண்டல் மண் அடுக்குகளை உருவாக்கியுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.ஆனால் இது மிக அரிதாகவே நடக்கும் நிகழ்வு என மற்றொரு தரப்பின் வாதம் முன்வைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

டைட்டானிக் சிதைவுகள் இருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள புவியியல் அம்சங்கள் குறித்து இன்னும் முழுமையாக ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. அதனால் தற்போது ஏற்பட்டிருக்கும் டைட்டன் நீர்மூழ்கியின் விபத்திற்கான காரணம் குறித்து உறுதியாக எதுவும் சொல்ல முடியாது.

ஐங்கரன்



சதம் 60

யாழ்.நூலகத்தை எரித்த பொலிசாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தனர்

மாநகரசபை காவலாளி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

'யாழ்.பொதுநூலகத்தை எரித்த பொலிஸாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தார்கள். அவர்களில் சிலரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.'

யாழ். மாநகரசபை காவலாளி திரு.பி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். இவர் உயர் மட்ட பொலிஸ் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்தார்.

பி. விக்னேஸ்வரன் இச்சம்பவம்பற்றி மேலும் கூறியதாவது:

'1-ம் தேதி இரவு 9-15 மணியளவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் எனக்கு போன் செய்தார். பெரியகடை மார்க்கட் கடைகள் எரிவதாகவும், 2 தண்ணீர் பௌசரைத் தயாராக வைத்திருக்கும்படியும்,

[6-ம் பக்கம் பார்க்க]

# சந்ததி மறவாச் சரித்திரம்

# 1981 ஜூன் 1

## நெருப்பினில் கருகிய யாழ்.,நூலகம்



தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கரவாதத்தால் முஇந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக்கட்டம் என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர்இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிக



ளைக் கொண்டஅழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம்.


தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமுமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசாநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜீன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜெ.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர்.

அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977, 1883இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது.

இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக

**"இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜெ.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்."**



நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது.

நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டிடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டிடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிந்ததனை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜெ.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.



ரஞ்சி

# சிறுவர் துஷ்பிரயோகமும் பாதுகாப்பு பொறிமுறையும்

## சிறுவர் என்று அழைக்கப்படுவோர் யார்?

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பதும் அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதும் மக்களாகிய எமது ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும். சிறுவர்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை பட்டயம் பதினெட்டு வயதிற்கு உட்பட்ட அனைவரையும் சிறுவர்கள் என இனங்காண்கிறது.

## சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள்:

இன்று இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், சங்கங்கள், சிறுவர் இல்லங்கள் ஆகியன இயங்கி வருகின்றன. இருப்பினும் சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்கதையாக இருந்து வருகின்றதை அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வருகின்ற துஷ்பிரயோகங்கள் தெளிவுபடுத்துகின்றன. நாளைய சமுதாயத்திற்கு வழிகாட்டும் இன்றைய சிறுவர்கள் தொடர்ந்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதனால் அது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் பெரும் சவாலாக அமைகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, கொரோனா தொற்று நோய், இயற்கை அனர்த்தங்கள் என மக்கள் மனதில் அமைதி இழந்திருக்கும் நிலையில் நாளுக்கு நாள் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் மக்களை பீதி கொள்ள வைத்துள்ளது.




## சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர்களை உடல், உளரீதியாக தாக்குதல், பீதி அடையச்செய்தல், தொழிலுக்கு அமர்த்துதல், புறக்கணித்தல், அன்பு செலுத்தாமை, பாலியல் துன்புறுத்தல்கள், அவர்களுக்குரிய உணவு, உடை, கல்வி, சுகாதாரம் , பாதுகாப்பு என அனைத்தையும் வழங்காமல் இருப்பது சிறுவர் துஸ்பிரயோகமாக பார்க்கப்படுகிறது.

## நாட்டில் ஏற்பட்ட சிறுவர் துஸ்பிரயோகங்களின் பதிவுகள்:

அண்மைக் காலங்களில் இலங்கையில் நடந்த சில சிறுவர் துஸ்பிரயோகங்களையும், உயிரிழப்புகளையும் ஊடகங்களின் வாயிலாக அறியமுடிகிறது. பெரும் வேதனைக்குரிய இந்தச் செயல்கள் இந்த நாட்டில் வாழும் கொடூர மனித மனங்களையும் நாட்டின் அபிவிருத்திப் பின்னடைவையும் தெளிவாகக் காட்டுகிறது. வவுனியா கணேசபுரத்தைச் சேர்ந்த ராசேந்திரன் யதுர்சினி என்ற பதினாறு வயது சிறுமியை இரக்கமற்ற நிலையில் கொலைசெய்து கிணற்றில்

வீசியுள்ளனர். பெற்றோர் அற்ற நிலையில் உறவினரோடு வாழ்ந்த இந்தச் சிறுமிக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.


அட்டலுகம பகுதியில் ஆயிஷா என்ற 9 வயது சிறுமியொருவர் தனியே கடைக்குச் சென்று திரும்பி வரும் வழியில் இளைஞர் ஒரு வர் கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்யமுயற்சி செய்து தோல்வியுற்று விடயம் வெளியல் கசிந்து விடும் என்று பயந்து சதுப்பு நிலத்தில் அமிழ்த்தி கொலை செய்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கறைப்பற்று பிரதேசத்தில் 11 வய தையுடைய சிறுமியொருவர் இரவு வேளையில் கடற்கரைக்குச் சென்று வந்தபோது வரும் வழியில் உறவினர்களே கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளனர். இந்தச் சிறுமியை இரவு வேளையில் பெற்றோர் வெளியில் அனுப்பிவிட்டு இருந்துள்ளமை இவர்களுக்கு பிள்ளைகள் மீதான கரிசனை பார்வை இல்லையென் பதையே தெளிவூட்டுகின்றது.

பெரிய நீலாவணை பகுதியில் மின்சார சபை ஊழியர் ஒருவர் வீடொன்றில் ஏற்பட்ட மின்சார கோளாரை சரிச்செய்ய சிறுவன் ஒருவனை துணைக்கழைத்துச் சென்று துஸ்பிரயோகம் செய் துள்ளார். கொஸ்கொட தியகம பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவர் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளார். இந்தச் சிறுமிக்கு பெற்றோர் அல்லது பாதுகாவளர் இல்லையா? என்ற ஐயமும் இவர் புகையிரதக் கடவைக்குச் செல்வதை பொதுமக்கள் எவரும் அவதா னிக்கவில்லையா என்பது பற்றியும் எவ்வித தகவல்களும் இதுவரை தெரியவரவில்லை. எனினும் ஒரு சிறுமியை பொறுப்பற்ற முறை யில் கைவிட்டு சிறுவரின் உரிமை, பாதுகாப்பு குறித்து சிந்திக்காமல் இருந்தமை பெருங்குற்றமாகும்.

பொகவந்தலாவைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாண வன் ஒருவன் தன் தந்தையோடு விறகு வெட்டச் சென்ற இடத்தில் மரம் ஏறி விழுந்து உயிர் இழந்துள்ளான். குடும்பத்தில் முதலாவது பிள்ளையான இச்சிறுவன் பாடசாலை நாட்களைத் தவிர்த்து வேலை களுக்குச் செல்வதாகவும் குடும்பப் பொறுப்பை சுமப்பதாகவும் இச் சிறுவனோடு பழகியவர்களினூடாக அறியமுடிகின்றது.

சென்ற வருடம் இஷாலினி என்னும் சிறுமியொருவரும் அமைச்சர் ஒருவரின் வீட்டிலிருந்து தீக்காயங்களோடு உயிர் நீத்தமை இலங்கையை ஆட்டம்காண வைத்த செயலாக பதிவாகிறது. இலங்கையைப் பொருத்தவரை சிறுவர்கள் மீதான வன்முறை, பாலி யல் சீண்டல்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றமையை ஊடகங்கள் வாயிலாக வெளிவந்த தகவல்களி னூடாக அறிகின்றோம்.





இலங்கையில் இவ்வாறான சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமைக்கு யார் காரணம்? என்ற வினா எழும் போது பொறுப்பற்ற பெற்றோர்களே இதற்கு முதலாவது காரணம் என்று சொல்லவேண்டியிருக்கிறது. பெற்றோர்களுக்கு பின்னரே சிறுவர்கள் இந்தச் சமூகத்திற்குள் அறிவை, அனுபவத்தைப் பெற் றுகொள்ள நுழைகின்றனர். முறையான சுகாதாரம் மேலே சுட்டிக் காட்டிய தகவல்களின் பிரகாரம் பெற்றோர்கள் பொறுப்பற்று பிள்ளை களைத் தெருவிற்கு அனுப்புவதாலும் வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்புவதாலும் இரவில் வெளியில் போய் வரும்போது பாதுகாப்பு வழங்காமையாலும் அவர்களை இடைநடுவில் தவிக்கவிட்டு இன் னுமொரு திருமணம் செய்வதாலும் சிறுவர்கள் மீதான வன்முறைகள் தொடர்கின்றன.

பிள்ளைகளைப் பெறுவதால் மட்டும் எல்லோரும் பெற்றோர்களாக முடியாது. பிள்ளை வளர்ப்பு, குழந்தை உளவியல், சிறுவர் பராமரிப்பு தொடர்பான விழிப்புணர்வற்று தன்னிச்சையாக வாழும் சிலரது மனப்பாங்கு எமது பிள்ளைகளின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி உள்ளது.சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அமைப்புகள், அதுதொடர் பான விழிப்புணர்வுகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டாலும் தெளிவ டைவது ஒரு சில பெற்றோர்கள் மட்டுமே என்பது கவலைக்குரிது.

### சிறுவர்கள் மீதான வன்முறைகளை குறைப்பதற்கான சில வழிமுறைகள்:

பிள்ளையின் கல்வி, விளையாட்டு, கலை முதலான அறிவு, சுதந்திரம் பாதிக்காத வகையில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்களுக்கு துணையாக அருகில் இருத்தல் அவசியமாகும்.புதிய நபர்களையோ அல்லது உறவினர்களையோ அயலவர்களையோ நம்பி பிள்ளைகளை அவர்களது வீட்டிற்கு அனுப்புவது, பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். சிறு வர்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு தகவல்களைப் பெற்றோர், அவர்களைச் சார்ந்து இருப்போர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெற்றவர்கள் முடிந்தவரை தமது பிள்ளைகளுக்கு தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொ டுக்க வேண்டும்.பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவ தோடு, பாடசாலை நிர்வாகத்தோடு வகுப்பாசிரியரோடு தொடர்பை பேணி பிள்ளையின் பாதுகாப்பை அடிக்கடி உறுதி செய்யவேண்டும்.

பிள்ளைகளை எப்போதும் அன்பாக பெற்றோர்களும் அவர்களின் பாதுகாவலர்களும் நடத்தவேண்டும்.பிள்ளைகளுக்கு பயத்தை ஏற்ப டுத்துவதைவிட இந்தச் சூழல்தொடர்பான அறிவு, பல்வேறு மனித நடத்தைகள் பற்றிய தெளிவை வழங்க ஆவன செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எதிர்காலத்தில் இந்தத் தேசத்தின் கதாநாயகர்கள் என்பதை பெற்றோரும் இந்தச் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டு செயற்படுவதன் மூலம் முடிந் தவரை சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் குறைத்துக்கொள்ள லாம். வளமான நற்பிரஜைகளை உருவாக்கலாம்.

ஆர்.சனத்



# காலத்தின் தேவை காணி உரிமையா? கக்கூஸ் அரசியலா?

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் 'லயன்' யுகத்துக்கு முழுமையாக முடிவுகட்ட முடியாமல் இருப்பதற்கு – பெருந்தோட்ட மக்களுக்கு இன்னும் காணி உரிமை கிடைக்காமையும் பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

அம்மக்களுக்கு காணி உரிமை கிடைக்கப்பெற்றால் அது – பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலை – வாழ்க்கைத் தரத்தை அடுத்தக்கட்டம் நோக்கி நகர்த்துவதற்கான ஆரம்ப புள்ளியாக அமையுமென்பது வெள்ளிடை மலை. ஆக மலையக மறுமலர்ச்சி பற்றி பேசுகையில் 'காணி உரிமை'க்கே முன்னுரிமையும் – முக்கியத்துவமும் வழங்கப்பட வேண்டும்.

இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் வீடமைப்பு திட்டங்களை முழுமையாக நம்பிக்கொண்டு – அவற்றுக்காக மட்டுமே வழிமீது விழிவைத்து காத்திருந்தால் லயன் யுகத்துக்கு முடிவுகட்ட இன்னும் பல தசாப்தங்கள் செல்லும். அதற்குள் அடுத்த நூற்றாண்டுகூட வந்துவிடலாம்.

எனவே, காணி உரிமையை வழங்கிவிட்டால் முடிந்தவர்கள் வீடுகளை நிர்மாணித்துக்கொள்வார்கள். இலகுக்கடன் திட்டத்தை வழங்கினால் அதன்மூலமும் பலர் பயன் அடைவார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஈபிஎப், ஈடிஎப் பணத்தை விடுவித்தால் [ அதை விரும்பி – தாமாக முன்வந்து கோருபவர்களுக்கு] அதன்மூலமும் கூட அவர்கள் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ளலாம்.

அத்துடன், விசேட வீடமைப்பு நிதியமொன்றை உருவாக்கினால் அதற்கு தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் நிச்சயம் நிதி உதவிகளை வழங்கும். மலசலக்கூடம் அமைப்பதற்கு குறுகிய காலப்பகுதிக்குள் பல லட்சம் ரூபா திரட்ட முடியுமென்றால் – அரச அங்கீகாரத்துடன் நிதியமொன்று நிறுவப்பட்டால் அதற்கு எவ்வளவு பேர் பங்களிப்பார்கள் என்பதை இலகுவாக ஊகித்துக்கொள்ள முடியும்.





**மலையக பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை என்பது இரு பிரதான தேசிய கட்சிகளினதும் தேர்தல் கால வாக்குறுதி. தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் அது உள்ளது. அதற்கு மக்களின் அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, விசேட சட்டமொன்றை இயற்றியாவது அதனை வழங்க வேண்டியது அரசின் கடப்பாடாகும். வெறுமனே மலையக அரசியல் தலைவர்களை மட்டும் குறைகூறிக்கொண்டிருக்காமல், அதற்காக மக்களும் குரல் கொடுக்க வேண்டும். மக்கள் மத்தியிலும் நிச்சயம் மாற்றம் வேண்டும்.**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குறைந்தபட்சம் தமது மூன்று மாத கால சம்பளத்தை அந்த நிதியத்துக்கு வழங்கலாம். தனியார்துறை ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை தியாகம் செய்யலாம். இலங்கைக்கு எம்மை அழைத்துவந்த பிரிட்டன் மற்றும் அனுப்பி வைத்த இந்தியாவிலும் உதவிகளைக் கோரலாம்.

இலங்கையில் உள்ள அத்தனை இந்து ஆலயங்களினதும் ஒரு மாதத்துக்குரிய உண்டியல் பணத்தை கோரலாம். (கோவில் திருவிழாவுக்கு வெள்ளைக் குதிரையையே லட்சம் கொடுத்து கொண்டுவருபவர்கள், இந்த உதவியை செய்யமாட்டார்களா என்ன? ) ஏனைய மதங்களின் வணக்கஸ்தலங்களும் தாமாக முன்வந்து உதவலாம். ஏன் ஐயப்பன், திருப்பதி ஆலய நிர்வாகங்களிடமும் பேச்சு நடத்தலாம். குறைந்தபட்சம் ஒரு நாள் லட்டு வருமானத்தையாவது தர மாட்டார்களா என்ன? இப்படி நிதியத்துக்கு நிதி திரட்ட பல வழிகள் (நடைமுறைக்கு சாத்தியமான) உள்ளன.

வீடமைப்பு பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு கண்டுவிடலாம். ஆனால் எல்லாவற்றுக்கு மேல் முதலில் காணி உரிமை கிடைக்கப் பெற வேண்டும். மலையக பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை என்பது இரு பிரதான தேசிய கட்சிகளினதும் தேர்தல் கால வாக்குறுதி. தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் அது உள்ளது. அதற்கு மக்களின் அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, விசேட சட்டமொன்றை இயற்றியாவது அதனை வழங்க வேண்டியது அரசின் கடப்பாடாகும். வெறுமனே மலையக அரசியல் தலைவர்களை மட்டும் குறைகூறிக்கொண்டிருக்காமல், அதற்காக மக்களும் குரல் கொடுக்க வேண்டும். மக்கள் மத்தியிலும் நிச்சயம் மாற்றம் வேண்டும்.

அரசியல்வாதிகள் திருமண வீட்டுக்கு வரவில்லை, மையவீட்டுக்கு வரவில்லை என்பதற்காக அவர்களுடன் முரண்படும் மக்கள், காணி உரிமை பற்றி பேசி, உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அது பற்றி கேட்க வேண்டும். அதற்காக கோபமடைய கற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் வீடு அல்ல, கக்கூஸ் கட்டுவதற்கு நிதி கிடைத்தால்கூட, காணி உரிமை இல்லாவிட்டால் அதனை செய்வதற்கு கம்பனிகளிடமே கையேந்த வேண்டிய நிலை உள்ளது.

எம் மக்கள் வளமாக்கிய மண்ணில் முளைத்த ஒரு மரத்தின் கிளையை வெட்டுவதாக இருந்தால்கூட தோட்ட நிர்வாகத்தின் அனுமதி பெற வேண்டும். கோவில்களை அமைப்பதற்கு இலகுவில் அனுமதி வழங்குபவர்கள், ஒரு வாசிகசாலையை அமைப்பதற்கு இழுத்தடிப்பார்கள். துணிந்து கட்டினாலும், சட்டத்தின் அனுமதியுடன் இடித்தழிப்பார்கள். அதன் பின்னால் உள்ள சதியையும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, காணி உரிமையை பெறுவதற்கான தேசிய வேலைத்திட்டம் அவசியம். அதற்காக குரல் கொடுப்போம். மலையக – 200 நிகழ்வுகளில் நில உரிமை கோஷம் ஓங்கி ஒலிக்கட்டும். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குதான் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கிக்கொண்டு, அவர்களை தாழ்த்தப்பட்ட சமூகமாக காண்பிப்பது?

'கக்கூஸ்' விவகாரத்தை வைத்து அரசியல் ரீதியில் விமர்சனம் செய்யாமல், ஆக்கப்பூர்வமாக சிந்திப்போம். மக்கள், அரசியல், சிவில் சக்திகள் என மூன்று சக்திகளும் இணைந்தால் மாற்றம் நிச்சயம். குறைந்தது காணி உரிமைக்காகவேனும் கரம்கோர்ப்போம்.

ஓர் இனம் தலைநிமிர 5 சதாப்தங்கள் (50 ஆண்டுகள்) போதும். ஆனால் இங்கு 20 தசாப்தங்கள் (200 வருடங்கள்) கடந்தும் 'நிலை' உயரவில்லை. ஆக மக்கள் தரப்பிலும் தவறு உள்ளது. 'படை' இருந்தும் பயந்த சனம் வாழும் மண்ணில் மாற்றம் வராது, மக்கள் வாழ்வு ஏற்றம் பெறாது. போராட மக்கள் முன்வர வேண்டும். (நான் அறவழி போராட்டத்தை சொன்னேன், தெளிவாக புரிந்து கொள்ளுங்கள். இல்லையேல் நான் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் அல்லவா?...)

எவராவது அழிக்க வந்தால், ஒரு தேன் பூச்சிகூட தன் இருப்பைக் காக்கவும், இனத்தைக் காக்கவும் 'ஒற்றை' கொடுக்கை வைத்துக்கொண்டு போராடுகின்றது. அது வெறுமனே சாவதில்லை. போராடியே மரணமடைகின்றது. ■





# ஹலோ நண்பா!!

ஹலோ நண்பா!!
நாம் வாழ்கின்றோமா
இல்லை.
வசிக்கின்றோமா
இவ்வுலகில்...?
புரியவில்லை.

தானே பேசி.
தானே சிரித்து.
அருகில் இருப்பவரை
மறந்து
என்ன வாழ்க்கை?
தொலைவில் உள்ள
சொந்தங்களை
தேடுகிறோம்!!


துயில் மறந்தோம்.
மயங்கிக் கிடந்தோம்.
சிந்தனை மறந்து
சிலையாய் நிற்கின்றோம்!

புன்னகைக்க மறந்து
புன்னகையை
இமேஜில் காட்டுகிறோம்!!

நாம்
போதையில் விழுந்து
புதைக்குழிக்குள்
மூழ்குகின்றோம்!
செல்பியால்
செத்து மடிந்தவர்கள் பலர்.
ஆபத்தில் உதவ மறந்து
வீடியோ எடுக்க
வேகம் காட்டுகிறோம்!
எது ஒன்று நன்மையோ
அதுவே அதிகமானால்.?
ஆபத்து!!
கத்தி என்பது
வெட்டும் கருவி
அனைவரும் அறிவோம் !
அது வெட்டுவது காய்களையா?
இல்லை
கைகளையா?
என்பது,
நம் கையில்தான்!

முடிந்தவரை தவிருங்கள்
முடியும் வரை
குடும்பத்தை நேசியுங்கள்!!

வழியெங்கும்
புன்னகை தூவி
கூடி உண்போம்!
முயல்வோம்
முயற்சிப்போம்!!



அன்புடன் முல்லை பாஸ்கர்



நவீனன்

# இந்தோனேசியா கைப்பற்றிய பழங்குடிகளின் தாயகம்




## சுயநிர்ணயத்திற்காக போராடும் மேற்கு பப்புவாவும் நியூசிலாந்து விமானியின் பணய விவகாரமும்

நியூசிலாந்து விமானியை பணயக்கைதியாக வைத்திருக்கும் மேற்கு பப்புவா இயக்கம், இந்தோனேசியா கைப்பற்றி ஆக்கிரமித்துள்ள தங்கள் பிராந்தியத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் வரை அவர் தங்கள் பிடியிலிருந்து விடுவிக்கப்படமாட்டார் என்று கூறியுள்ளது.

### நியூசிலாந்து விமானி பணயம்:

2023 பெப்ரவரி 7 இல் இந்தோனேசியாவில் மேற்கு பப்புவா போராளிகள், பிலிப் மெஹர்டென்ஸ் [Philip Mehrtens ] என்ற நியூ சிலாந்து விமானியை பணயக்கைதியாக பிடித்தனர். இந்தோனேசிய விமான நிறுவனமான சுசி ஏர் [Susi Air] பப்புவாவிற்கு உள்ளேயும் வெளியேயும் விமானங்களை இயக்குகிறது. இவ்விமானியும் இந்த நிறுவனத்தில் பணியாற்றி உள்ளார்.

நியூசிலாந்து விமானியை பணயக்கைதியாக பிடித்ததை மேற்கு ‘பப்புவா தேசிய விடுதலை இராணுவம்’ TPNPB பொறுப்பேற்றுள்ளது. அவர்கள் தங்கள் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அனைத்து வெளிநாட்டினரையும் குறிவைப்பதாகக் கூறியுள்ளனர்.

பிப்ரவரி 15 ஆம் தேதி, விமானியின் புகைப்படங்களில் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதையும், பப்புவா இயக்கத்தைச் சேர்ந்த ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களால் பாதுகாக்கப்படுவதையும் காட்டியது.

இந்தோனேசிய அரசுபப்புவா பிராந்தியத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் வரை அவர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார் என்று கூறியுள்ளனர்.

### மேற்கு பப்புவா சுதந்திர இயக்கம்:

பப்புவா இயக்கம் [Free West Papua movement ]என்பது மேற்கு நியூ கினியாவை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இயக்கமாகும். தற்போது இந்தோனேசியாவால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தை பிரிக்க நீண்ட காலமாக கோருகிறது.

நீண்ட காலமாக தொடரும் போரில் மத்திய பப்புவா மாகாணங்களில் இந்தோனேசியாவின் இராணுவத்தால் 500,000 மேற்கு பப்புவான் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் கற்பழிக்கப்பட்டுள்ளனர், பலர் சித்திரவதை செய்யப்பட்டு வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர்.

அங்கு தொடரும் இனவெறி பாகுபாட்டால் பேச்சு சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ளது. ஆச்சரியப்படும் விதமாக ஆஸ்திரேலியா மற்றும் நியூ கினியாவின் நிலப்பரப்புகள்கடல் மட்டத்தால் மட்டுமே பிரிக்கப்பட்டிருந்தாலும்,




பப்புவான்களும் பழங்குடியின ஆஸ்திரேலியர்களும் குறைந்தது 25,000 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவருக்கொருவர் தொடர்புபட்டுள்ளதாக தெரிகிறது.

மேற்கு பப்புவா (West Papua )ஆனது பப்புவா நியூ கினியாவில் (PNG) இருந்து வேறுபட்ட பிரதேசமாகும். பப்புவா இந்தோனேசியாவில் உள்ள ஒரு மாகாணம் ஆகும். மற்றும் பப்புவா தீவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. ஆனால் பப்புவா நியூ கினியா (PNG ) கிழக்கில் உள்ளது. பப்புவா பெரும்பாலும் மேற்கு பப்புவா என்றும் குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், பப்புவாவைக் குறிப்பிடுவது பப்புவா நியூ கினியா எனப்படும் கிழக்குப் பகுதி உட்பட பப்புவா தீவைக் குறிப்பதாகும்.

## இரண்டாம் உலகப் போரில் பப்புவா:

இரண்டாம் உலகப் போரின் போது, நெதர்லாந்தின் கிழக்கு இந்தியத் தீவுகள் Netherlands East Indies (பின்னர் இந்தோனேசியா) ஜப்பானியப் போர் முனையில் எண்ணெய் வழங்குவதற்காக அதிபர் சுகர்னோவால் வழிநடத்தப்பட்டது. பின்னர் 17 ஆகஸ்ட் 1945 இல் இந்தோனேசியா குடியரசாக சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.

நெதர்லாந்தின் நியூ கினியா (மேற்கு நியூ கினியா, பின்னர் ஒரு நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகளின் ஒரு பகுதி) மற்றும் ஆஸ்திரேலிய நிர்வாகப் பகுதிகளான பப்புவா மற்றும் பிரிட்டிஷ் நியூ கினியா ஆகியவை ஜப்பானிய கட்டுப்பாட்டை எதிர்த்தன. பசிபிக் போரின் போது அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியப் படைகளுடன் கூட்டாளிகளாக செயற்பட்டு இருந்தன.

## சுயநிர்ணயத்திற்காக போராடும் மேற்கு பப்புவா:

இந்தோனேசியா மேற்கு பப்புவான் பிரதேசத்தை கைப்பற்றி 40 ஆண்டுகளுக்கும் மேலாகியும், பழங்குடி பப்புவான்கள் இன்னும் சுயநிர்ணயத்திற்காக போராடுகிறார்கள். இந்தோனேசியா 1969 இல் மேற்கு பப்புவாவை அதிகாரப்பூர்வமாக கையகப்படுத்தியது. சுதந்திரம் குறித்த போலி வாக்கெடுப்பில் உள்ளூர் மக்களில் ஒரு சிலரே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். இதன் பின் இந்தோனேசியா மேற்கு பப்புவாவை அதிகாரப்பூர்வமாக கையகப்படுத்தியது

ஆஸ்திரேலியாவின் வடக்கே நியூ கினியா தீவின் மேற்குப் பகுதி ஒரு காலத்தில் டச்சு காலனியாக இருந்தது. ஆனால் நெதர்லாந்து 1950 களில் திரும்பப் விலகத் தயாராகத் தொடங்கியதும், 1961 ஆம் ஆண்டில் மேற்கு பப்புவான்கள் சுதந்திரத்தைப் பற்றி விவாதிக்க ஒரு மாநாட்டை நடத்தினர். இதன்பின் மேற்கு பப்புவான் மக்கள் 'உதய நட்சத்திரம்' (Morning Star) கொடியை தங்கள் சுதந்திரத்திற்காக உயர்த்தினர்.

ஆனால் புதிதாக சுதந்திரமடைந்த இந்தோனேசியா இந்த மாகாணத்தின் மீது தனது உரிமையை வலுக்கட்டாயமாக வலியுறுத்தத் தொடங்கியது. பின்னர் இந்தோனேசியா, மற்றும் பழங்குடி மக்களுக்கு இடையே பாரிய மோதல் வெடித்தது.

## போலி வாக்கெடுப்பும் கைப்பற்றலும்:




1962 ஆம் ஆண்டில், இந்த பிராந்தியப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க 'நியூயார்க் ஒப்பந்தம்' என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் ஒப்பந்தம் ஒன்று வரையப்பட்டது. மேலும் மேற்கு பாப்புவான் ஆலோசனை அல்லது ஒப்புதல் இல்லாமல் இந்தோனேசியா மே 1963 முதல் மேற்கு பப்புவாவின் தற்காலிக நிர்வாகியாக தன்னை நியமித்தது. ஐ.நா. உடன்படிக்கையின் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், அனைத்து மேற்கு பப்புவான்களும் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் 1969 இல் வாக்குப்பதிவு நடத்தப்பட்டபோது, அது சுதந்திரமான மற்றும் நியாயமானதாக இருக்கவில்லை.

இந்தோனேசிய அரசின் இராணுவம் தாம் நியமித்த 1,026 தலைவர்களை ஒட்டுமொத்த மக்களின் சார்பாக வாக்களிக்கத் தேர்ந்தெடுத்தது. மேலும் அவர்கள் தவறான வழியில் வாக்களித்தால் அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தியது. இந்தச் சூழலில், 'சுதந்திர தேர்வுச் சட்டம்' "Act of Free Choice'என்றழைக்கப்படும் முடிவு ஒருமனதாக இருந்தது. மேற்கு பப்புவாவை இந்தோனேசியா கைப்பற்றியது ஐ.நா.வால் ரப்பர் முத்திரையிடப்பட்டது போல அமைந்தது.

ஏறக்குறைய அனைத்து பழங்குடி பப்புவான்களும் இந்த வாக்கெடுப்பை நிராகரித்தனர். இதை 'தேர்வு இல்லாத செயல்' என்று அழைக்கின்றனர். மேலும் பலர் இன்றுவரை புதிய சுயநிர்ணயத்திற்கான உண்மையான வாக்கெடுப்பைக் கோருகின்றனர்.

## சுயநிர்ணயத்திற்கான வாக்கெடுப்பு:

இந்த தவறான வாக்கெடுப்பு மேற்கு பப்புவான்களின் சுதந்திரத்திற்கான அழைப்புக்கு அடிப்படை முடக்கமாக அமைந்தது. பூர்வீக மேற்கு பாப்புவான்கள் இந்தோனேசிய இராணுவம் மற்றும் காவல்துறையினரால் தினசரி கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர். மேலும் பலர் தொடர்ந்து அச்சத்தில் வாழ்வதாக தெரிவிக்கின்றனர்.

1963 முதல் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். சுதந்திரத்திற்காக கிளர்ச்சி செய்பவர்கள் வெளிப்படையாக அதிகளவில் சித்ரவதை செய்யப்படுகிறார்கள்.

அத்துடன் தங்கள் உதய நட்சத்திரக் கொடியை உயர்த்துவது சட்டவிரோதமானது என்றும் மாகாணத்தின் பல தலைவர்கள் அமைதியான செயல்களுக்காக நீண்ட சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

மேற்கு பாப்புவா பகுதியில் சுதந்திரத்திற்கான ஆயுதமேந்திய இயக்கம், இந்தோனேசிய பாதுகாப்புப் பணியாளர்களுடன் ஆயுத மோதல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அக்டோபர் 2011 இல், மூன்றாம் பாப்புவான் மக்கள் காங்கிரசு, சுய-ஆட்சி தொடர்பான பிரச்சினைகளை பற்றிய மாநாடு இந்தோனேசியப் படைகளால் வன்முறையில் முறியடிக்கப்பட்டது. அதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

## இந்தோனேசியா பிராந்திய ஒருமைப்பாடு:

இந்தோனேசியா அதன் 'பிராந்திய ஒருமைப்பாட்டை' பாதுகாப்பது

ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன் எனில் மேற்கு பப்புவாவில் உள்ள மிகப்பெரிய துறைமுகமான 'ஃப்ரீபோர்ட்' மெக்மோரன் தங்கம் மற்றும் தாமிரச் சுரங்கம் நாட்டின் மிகப்பெரிய வரியும், இலாபம் ஈட்டும் ஒன்றாகும்.

## ஆஸ்திரேலியாவின் அரசியல் கூட்டாளி இந்தோனேசியா?

மேற்கு பப்புவா ஒரு காலத்தில் டச்சு கிழக்கிந்தியத் தீவுகளின் ஒரு பகுதியாக இருந்ததால், அது இன்றைய சுதந்திரமான இந்தோனேசிய குடியரசின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று இந்தோனேசியா தனது பங்கிற்கு வாதிடுகிறது. முக்கியமாக இரண்டு பெரிய

ஆஸ்திரேலிய அரசியல் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டில் அவர்களை ஆதரிக்கின் றன. ஆஸ்திரேலியாவிற்கு இந்தோனே சியா ஒரு முக்கியமான அரசியல் கூட்டா ளியாகக் கருதப்படுகிறது. மேலும் இரு தரப்பிலிருந்தும் அரசியல்வாதிகள் தங்கள் இந்தோனேசிய சகாக்களுடன் நட்பு போக் கைக் கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா இந்தோனேசிய ராணுவத்துடன் நெருங்கிய உறவைப் பேணி வருகிறது. மேற்கு பப் புவான் சுதந்திர இயக்கத்தின் மீதான சமீ பத்திய அடக்குமுறைகளில் ஈடுபட்டுள்ள அதன் பயங்கரவாத எதிர்ப்பு போலீஸ் பிரிவு, 'டிடாச்மென்ட் 88' க்கு இது பயிற்சி மற்றும் நிதியுதவியையும் வழங்குகிறது.

ஆனால் ஆஸ்திரேலியாவில் ஒரு குறிப் பிடத்தக்க மேற்கு பப்புவான் சமூகம் மற்றும் மேற்கு பப்புவான் சுதந்திரத்தை ஆதரிப் பவர்களின் பெரிய வலையமைப்பைக் கொண்டுள்ளது. மேற்கு பப்புவான் சுதந்திர இயக்க ஆதரவான இந்த அமைப்பு இரு

மேற்கு பப்புவா குழு, சுதந்திரத்திற்கான சர்வதேச ஆதரவிற்காக பாடுபடும் அதே வேளையில் பிரதேசத்தில் உள்ள பிரச்சி னைகள் பற்றிய விழிப்புணர்வை பரவலாக ஏற்படுத்துகிறது.

1963 ஆம் ஆண்டு இந்தோனேசிய நிர்வாகம் இங்கு தொடங்கும் வரை நெதர் லாந்து மற்றும் அதன் நியூ கினியா காலனி யின் போருக்கு முந்தைய உறவு, பப்புவான் சிவில் மற்றும் பிற சேவைகளை மேம்ப டுத்தி இருந்தது. பின்னர் அவர்களின் பிர தேசங்கள் சுதந்திரத்திற்காக ஒன்றிணைவ தற்கு முட்டுக்கட்டையாக ஆஸ்திரேலிய – அமெரிக்காவின் நலன்களுக்காக இரண்டு பிராந்தியங்களையும் தனித்தனியாக வைத் திருந்தன.

ஐக்கிய நாடுகளின் சாசனம் மற்றும் பொதுச் சபை தீர்மானம் 1514 (XV) இன் படி மேற்கு நியூ கினியா மக்கள் சுயநிர்ணய உரிமையை அனுமதிக்க வேண்டும் என்று கோருகிறது. இதனையே நெதர்லாந்தும்




நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு இடையிலான சமரசம் பேண நீண்டகாலம் முயல்கிறது.

**டிசம்பர் 1 பாப்புவான் சுதந்திர தினம்;**

மேற்கு பப்புவா சுதந்திர இயக்கம் மூன்று முக்கிய கட்டமைப்புகளைக் கொண்டுள்ள து. 'கோலியாத் தபுனி' தலைமையிலான மேற்கு பப்புவா தேசிய விடுதலை இரா ணுவம் (West Papua National Liberation Army). இரண்டாவது மேற்கு பப்புவா புரட்சி இராணுவம் (West Papua Revolutionary Army) 'மத்தியாஸ் வெண்டா' தலைமை யில் உள்ளது.

இத்துடன் மேற்கு பப்புவா தேசிய இரா ணுவம் (West Papua National Army) 'பெர் னாண்டோ வோரோபே' தலைமையிலும், ஆயுதமேந்திய பிரிவுகளின் மற்றய குழுக் கள் ஒவ்வொன்றும் தனித்தனி தளபதி இல்லாமல் வரையறுக்கப்பட்ட பிராந்திய கட்டுப்பாட்டுடனும் செயல்படுகின்றன. வெளிநாட்டில் உள்ள தலைவர்களின் ஒரு

தொடர்ந்து வலியுறுத்துகிறது.

மேற்கு பப்புவா போராளிக் குழுக்கள், ஒவ் வொரு ஆண்டும் டிசம்பர் 1 அன்று மேற்கு பப்புவாவின் மார்னிங் ஸ்டார் கொடியை உயர்த்துகின்றன, அதை அவர்கள் 'பாப் புவான் சுதந்திர தினம்' என்று அழைக்கி றார்கள். இதைச் செய்பவர்கள் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்படலாம் என்றும், இந்தோனேசியாவில் ஏழு முதல் இருபது ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் இந்தோனேசிய காவல்துறை எச்சரித்துள்ளது.

**தொடரும் சுயநிர்ணயபோராட்டம்:**

சுயநிர்ணயத்திற்காகபோராடும்மேற்கு பப்புவாமக்கள்நீண்டகாலமாக இக் கொடு மைகளுக்குஎதிராகபோராடி வருகின்றனர். இந்தோனேசியாமேற்கு பப்புவான் பிரதே சத்தைகைப் பற்றி40ஆண்டுகளுக்கும் மேலாகியும், பழங்குடி பப்புவான்கள் இன் னும் தங்களின் சுயநிர்ணயத்திற்காக போராடுகிறார்கள்.



# குட்டிக்கதை!

ஒரு கிராமத்தில் பாடசாலையில் மாணவர்கள் கல்வி பயின்று கொண் டிருந்தனர். அந்தப் பாடசாலையின் கல்வித்திறனை சோதிப்பதற்காக ஒரு உயர் அதிகாரி வந்திருந்தார்.

அவர் அங்கிருந்த வகுப்பறை ஒன்றினுள் நுழைந்தார். அங்கி ருந்த மாணவர்களைப் பார்த்து 'தாமரையின் உயரம் என்ன? என்று கேட்டார்.

அதற்கு மாணவர்களில்சிலர் ஐந்து அடி என்றும்,சில மாணவர்கள்பத்து அடி என்றும், இருபது அடி என்றும் மனதுக்குள் தோன்றியவிடைக ளைச் சொன்னார்கள்.அதற்குஅவர் இது சரியானதல்ல என்றுவிடை யைக் கூறினார்.

குளத்தில் உள்ள தண்ணீர் அளவு தான் தாமரையின் உயரம். அவ் வாறே நம் எண்ணங்களும். எண் ணத்தின் அளவு உயர நம் வாழ்க் கையும் உயரும் என்றார்.

இதன் விளக்கம் யாதெனில் தண் ணீர் ஐந்து அடி உயரமாக இருந்தால் தாமரை உயரம் ஐந்து அடியாகவும், பத்து அடியாக

இருந்தால் தாமரை உயரம் பத்து அடியாகவும் இருக்கும். அது போலவே நம் எண்ணங்கள் உயர் வாகஇருந்தால் நம் வாழ்க்கையும் உயரும் என்றாரே பார்க்கலாம்.

நம் எண்ணங்களை உயர்வாக வைத்துக்கொள்வோம். வாழ்க் கையை உயர்த்திக் கொள்வோம்.

# பாடம்



எடிசன் மின்சார பல்பை கண்டுபிடித்த பிறகு தன் நண்பர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அந்த பல்பை ஒளிர வைத்து காட்டுவதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

அவர் தனது உதவியாளரை அழைத்து மின்சார பல்பை மேல் தளத்திற்கு கொண்டு வரச் சொன்னார். அந்த உதவியாளர் பல்பை கொண்டு வருகையில் அது கை தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளரும் பதற்றம் அடைந்து விட்டார் ஆனால் எடிசன் எந்த பதற்றமும் அடையவில்லை.

ஆயிரம் தோல்விகளை சந்தித்து மின்சார பல்பை உருவாக்கிய அவருக்கு மீண்டும் ஒரு மின்சார பல்பை உருவாக்குவது கடினமான காரியமாக இருக்கவில்லை. சிறு முயற்சி செய்து மீண்டும் ஒரு பல்பை உருவாக்கினார். அதை மீண்டும் அதே உதவியாளரிடம் கொடுத்து மேலே கொண்டு வரச்செய்தார்.

பல்பை கீழே போட்டு உடைத்த அவரிடமே அதை மீண்டும் கொடுக்கிறீர்களே என்று சிலர் ஆச்சரியப்பட்டு எடிசனிடம் கேட்டார்கள்.

அந்த பல்ப் மீண்டும் உடைந்தாலும் என்னால் இன்னொரு பல்பை உருவாக்க முடியும். ஆனால் என்னுடைய உதவியாளரின் மனதை உடைத்து விட்டால் அதை என்னால் சரிசெய்ய முடியாது! அதனால் தான் மீண்டும் அவரிடம் அதே பணியை கொடுத்தேன். அவர் அவரது பணியையும், அவரது பொறுப்பையும் என்னுடைய நம்பிக்கையும் நன்றாக உணர்ந்து மீண்டும் வேலை செய்வார்என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார் எடிசன்.

அப்போதுதான் எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த அந்த பொறுமையின் முக்கியத்துவத்தையும் அங்கிருந்த அனைவரும் உணர்ந்தார்கள்.

எடிசன் ஆயிரம் முறை தோல்வி கண்டு இறுதியில் ஒரு மின்சார பல்பை கண்டுபிடித்தார். அந்த பல்ப் தனது உதவியாளரின் தவறினால் விழுந்து உடைந்ததைக் கண்டு எடிசன் திகைக்கவில்லை, சோர்ந்து போகவில்லை.. நொந்து போகவில்லை. அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் கூட அமைதியாக நடந்து கொண்ட நேர்மறை சிந்தனை உள்ள, சகமனிதர்களுக்குமதிப்புக் கொடுக்கும் ஒரு அற்புதமான மனிதர் எடிசன்.



அங்கம்: 10

# வலை

**கொற்றவை**

ஆனந்தனுக்கு கொஞ்சம் யோசனையாகவே இருந்தது. என்ன, ஏது என்று எதுவுமே கேட்காமல் டானியல் அண்ணர் சொன்ன உடனே அவனும் வெளிக்கிட்டு வந்து விட்டான். அவரும் எதுவும் பேசவில்லை. கொஞ்சம் பதட்டமாக இருப்பது போலத் தோன்றியது.

மோட்டார் சைக்கிள் அண்ணரின் வீட்டுப் பக்கம் போகாமல் வேறு பக்கம் திரும்பியது.

''அண்ணை! துலைக்கோ போறம்?.... சொல்லுறன் எண்டு தப்பா நினைக்காதேயுங்கோ..... நான் ஓட்டட்டே.....? நீங்கள் கொஞ்சம் டென்சனா இருக்கிறியள்.....!''

மோட்டார் சைக்கிளை ஓரங்கட்டினார் டானியல் அண்ணர்.



''தென்மராச்சி மட்டும் போகோணும்.... ஓம்...! நீரே ஓடும்...!''

''இங்க யாழ்ப்பாணத்தில் இந்தப் பள்ளிக்குடத்தில ஏ.எல் படிக்கிற பெடியன் ஒருத்தன்..... கனநாளா கஸ்டப்பட்டு... கடைசியில... இவனுக்கு பல விசயங்கள் தெரியும் எண்டு அறிஞ்சன்.... இவனுக்கு உள்ளாலைதான் பள்ளிக்குடத்தின்ர சீர்கேடுகளை துப்பு துலக்க ஏலும் எண்டு அவனைச் சந்திக்க பலதடவை முயற்சி செய்தனான்.... அவனும் சம்சயப்பட்டு சுழிச்சு சுழிச்சு தப்பிக்கொண்டு இருந்தவன்.....''

அண்ணர் முடிக்க முன்னர் இடைமறித்தான் ஆனந்தன்.

''இப்ப பெடியனைப் பாக்கவே போறம்...? அது அந்தப் பிரபல பள்ளிக்குடமல்லோ....? அங்க பெரிய பெரிய புள்ளியளின்ரை பிள்ளையளுக்குத்தான் சுலபமா இடம் கிடைக்கும் எண்ணுவினம்....''

''ஓம்! இவனும் நாலு பேருக்குத் தெரிஞ்ச குடும்பத்துப் பெடியன்தான்.... தகப்பனும் ஒரு அதிபர் ... தென்மராட்சியில...''

டானியல் அண்ணர் சொன்ன பள்ளிக்கூடமும் தென்மராட்சியில் ஒரு பிரபல பாடசாலைதான்.டானியல் அண்ணர் கலாவின் பிரச்சனையை விடுவதாக இல்லை. உண்மையைச் சொல்லப்போனால் எந்தத் தகப்பனும் இப்படித்தான் இருப்பினம்....

''அண்ணை!..., பிரச்சனை சரியான பெரிசு அவதானமா இருக்கோணும்....! எடுத்தோம் கவிழ்த்தோம் எண்டு கோவத்தில எதுகும் செய்யப்படாது..... பிள்ளை மட்டுமில்லை... கனக்க



பெம்பிளைப் பிள்ளையளின்ரை வாழ்க்கையும் இதுக்குள்ள சிக்கிக் கிடக்குது.... சம்பந்தப்பட்ட ஆக்கள் கேடு கெட்டவங்கள்.... சாக்கடை அரசியல் செய்யிறவங்கள்.... கட்சியள், காவல்துறை...., ஏன்! இராணுவப் புலனாய்வு கூட இதுக்குள்ள இருக்குது.... கொஞ்சம் கவனக் குறைவா இருந்தாலும் போட்டுத் தள்ளீட்டு போய்கொண்டே இருப்பாங்கள்....''

டானியல் அண்ணர் ஆனந்தனின் அறிவுரைகளை தட்டியதே இல்லை. அவன் இருந்த இடமும் அங்கு கற்றுக்கொண்ட அறிவும் எப்போதுமே அவரைப் பிரமிக்க வைக்கும்.

''மனிசன் கெட்டிக்காரன்தான் ஆருக்கும் தெரியாமல் உள்ளுக்கை குடைஞ்சு கடைசியில ஒரு ஆளைக் கண்டுபிடிச்சிட்டார்...'' மனதினுள் எண்ணிக்கொண்டான் ஆனந்தன்.

மோட்டார் சைக்கிளை சாவகச்சேரி நெடுங்குளம் பக்கம் திருப்பச் சொன்னார் அண்ணர்.

''நேர வீட்டுக்கே போறமோ? ஏதும் வில்லங்கம் வந்திடப் போகுது....''

''பிரச்சனை இப்ப வேற மாதிரி ஆகீட்டுது தம்பி!... பெடியன் தூக்கில தொங்கீட்டுது எண்டு தகவல்... அதுக்குத்தான் போறம்...''

''என்ன...? ஆள் இப்ப உயிரோட இல்லையோ....?'' அதிர்ச்சியுடன் கேட்டான் ஆனந்தன்.

''ஓம்..! என்ரை பிள்ளை தற்கொலை செய்து சாகிற பிள்ளை இல்லை ஆரோ அடிச்சு தொங்க விட்டிருக்கினம் எண்டு வீட்டுக்காரர் அடிச்சுச் சொல்லுகினமாம்... எனக்கும் அப்பிடித்தான் படுது.... நான் சந்திக்கக் கேட்ட நேரமெல்லாம் பெடியன் யாருக்கோ அல்லது எதுக்கோ பயந்த மாதிரி என்ரை மனசுக்கு பட்டுக்கொண்டே இருந்தது.....''

பெடியனின் வீடு தெருவோரமாக இருந்தது. வீட்டு வளவிலும் தெருவிலும் சனங்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர். எல்லோரிடத்திலும் ஒருவித அதிர்ச்சி தெரிந்தது. பக்கத்து வீட்டுக்காரரிடம் பேச்சுக் கொடுத்தான் ஆனந்தன்.

''பெடியன் வீட்டில இருக்கிறதே தெரியாது... நான் அறிய இவன் எந்த வம்பு தும்புக்கும் போனதில்லை.... சரியான செல்லம்... ஒரே பெடியன் பாருங்கோ....! என்ன கேட்டாலும் வாங்கிக் குடுத்திடுவினம் படிப்பிலயும் கெட்டிக்காரன்.... இவன் தூங்கிச் சாக ஒரு காரணமுமில்லை. கடைசி மட்டும் உது நடந்திராது..... '' உறுதியாகச் சொன்னார் அவர்.

வீட்டினுள் இருந்து அழுகுரலும்,தமிழிலும் சிங்களத்திலுமாக வாக்குவாதப்படுவதும் கேட்டது. 'கல்விச் சுமையால் ஏற்பட்ட மனஅழுத்தம் காரணமாக தற்கொலை செய்துகொண்டார்' என்று வழக்கை முடிக்க காவற்துறையினர் பிரயாசைப்படுவதாகவும், குடும்பத்தினர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து உடலை தகனம் செய்ய மறுப்பதாகவும் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

பையனின் பின் தலையிலும், முகத்திலும், கால்களிலும் காயங்கள் இருந்தனவாம்.

'' இது கொலை....! அப்பட்டமாத் தெரியுது. எங்கடை பிள்ளை எந்த மன அழுத்தத்திலயும் இருக்கேல்லை.... ராத்திரி படுக்கப் போக முதலும் அமெரிக்காவுக்கு ஸ்கொலசிப்பில படிக்கப் போக விருப்பம் அங்க அவன்ரை மூத்த தமக்கை இருக்கிறா.... அவவிட்டை என்னென்ன செய்யோணும் எண்டு கதையுங்கோ.... எண்டு சொன்ன பிள்ளை அறைக்குள்ளை போனவுடனை தொங்கினதோ?.... ஐயோ....!! எங்கடை பிள்ளையை அநியாயமாக் கொண்டிட்டாங்கள்..... பொலிசுக்காரரும் சேர்ந்து கழுத்தறுக்கிறாங்கள்.... முடிவு தெரியாமல் சவத்தை எடுக்க விடம்....''

குடும்பத்தினர் குமுறிக் குமுறி அழுதார்கள்.


ஒரு ஜீப்பும் சிறிய ரக வான் ஒன்றும் வந்தன. அதிலிருந்து இறங்கியவர்கள் வீட்டின் உள்ளே போனார்கள். ஆம்புலன்ஸ் ஒன்றும் வந்தது. சிறிது நேரத்தில் ஸ்ட்ரெச்சரில் உடலைக் கொண்டு வந்து வாகனத்தில் ஏற்றினார்கள். உடல் மூடிக் கட்டியிருந்தது. எதுவும் தெரியவில்லை. ஆம்புலன்ஸ் புறப்பட்டுச் சென்றது. வீட்டினுள் போனவர்கள் திரும்பி வராததால் தெருவில் மக்கள் கூட்டம் இன்னமும் காத்துக் கிடந்தது.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. உள்ளே என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. இறுதியில் மூட்டை மூட்டையாக பொருட்கள் கொணர்ந்து வானில் ஏற்றப்பட்டன. வாகனங்கள் புறப்பட்டு தெருமுக்கில் சென்று மறைந்தன.

உறவினர் ஒருவர் உள்ளே போய் சிறிது நேரத்தில் வெளியே வந்தார்.

''அவ்வளவுந்தான்..... எல்லாம் முடிஞ்சுது. பெடியனின்ரை அறையைத் தலைகீழாக் கலைச்சு என்னென்னமோ தேடினவங்களாம்..... அறைக்கை இருந்த பெடியனின்ரை பொருட்களை மூட்டையாக் கட்டி விசாரணைக்கு எண்டு கொண்டு போட்டாங்கள். அறையையும் பூட்டி சீல் வைச்சாச்சு.... பொடியையும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டாங்கள்.... இனி என்ன... கதையை மாத்தி எழுதிப் போடுவங்கள்.... அவ்வளவுந்தான். எல்லாம் முடிஞ்சுது....'' விரக்தியும் வெறுப்புமாகச்





சொன்னார்.

சனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையத் தொடங்கியது. ஆனந்தனும் மோட்டார் சைக்கிளை எடுத்தான். எதுவும் பேசாமல் டானியல் பின்னிருக்கையில் ஏறிக்கொண்டார். வழி நெடுகிலும் அவர் எதுவும் பேசவில்லை. ஆனந்தனால் புரிந்து கொள்ள முடிந்தது. பெற்ற மகள் தொடர்பான என்னென்ன கேடுகெட்ட தகவல்கள் அவர்களிடம் சிக்கியிருக்கிறது என்று தெரியாமல் ஒரு தகப்பனாக அவர் உள்ளுக்குள்ளே தவிப்பது அவனுக்குத் தெரியும். ரெஜினாக்காவிடமும் தனது மனக்குமுறல்களை அவரால் பகிர்ந்து கொள்ள முடியாது. அவ தாங்க முடியாது அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி விடுவா.

வீட்டில் அவரை இறக்கி மோட்டார் சைக்கிளையும் கொடுத்துவிட்டு தான் நேரே நடந்து வீட்டுக்குப் போகவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். இந்த சம்பவத்தையும், வேறு சில சம்பவங்களையும் கோர்த்து சிந்திக்க வேண்டியிருந்தது. டானியல் அண்ணருக்கும் அமைதி தேவைப்படும்.

வீடு வந்தது.

''உள்ளுக்கு வந்திட்டுப் போம் தம்பி..!'' என்றார் டானியல். தட்ட முடியவில்லை. வீட்டிற்கு வெளியே மாமரங்கள் சோலையாக இருந்த இடத்தில் போடப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். ''தேநீரைக் கொண்டுவந்து தந்த ரெஜினாக்கா அவர்கள் ஏதோ தீவிரமான யோசனையில் இருப்பதைப் பார்த்து ஒதுங்கிப் போய்விட்டா....''

''நீர் என்ன நினைக்கிறீர் தம்பி?''

''பாத்தா சூசைட் மாதிரி தெரியேல்லை.... இவ்வளவு தூரம் வருது எண்டால் உள்ளுக்கை பிரச்சனை பெரிசு.... சம்பந்தப்பட்டவையள் அரசாங்க பாதுகாப்போடை தப்பக்கூடிய பெரிய இடமாக்கிடக்கு... திட்டமிட்டு அரசாங்கம் செய்யிற வேலையின்ரை ஒரு அங்கமாகவும் இருக்கலாம்... உங்களுக்கு என்னென்ன தெரியும் அண்ணை? இந்தப் பெடியன் இதில எங்க வாறான்....?

''கடைக்கு வாற ஒருத்தர் தற்செயலாச் சொன்ன ஒரு சின்ன விசயத்தை வைச்சுத்தான் இவனைக் கண்டுபிடிச்சனான். பெடியனை ஏதோ ஒரு விசயத்தை வைச்சு 'லொக்' பண்ணி வைச்சிருக்கிறாங்கள். இவனை வெருட்டி வைச்சுத்தான் பெம்பிளைப் பிள்ளையளின்ரை தகவலுகள் எடுத்திருக்கிறாங்கள்.... இவன் ஆருக்கு தகவல் குடுக்கிறவன் எண்டு அறிஞ்சா ஆக்களைப் பிடிச்சுப் போடலாம் எண்டு பாத்தன்.... இதில போதை, செக்ஸ் எண்டு கனக்க விசயங்களை அந்த வாத்தி, அவனுக்குப் பின்னால நிக்கிறவங்கள் மட்டுமில்லாமல் பள்ளிக்குடப் பெடியளும் செய்திருக்கினம். அவை வாள் வெட்டுக் குழுவோட இருக்கினம் எண்டு எனக்கு ஒரு சந்தேகம்..... ஆரோ எங்களுக்கு நல்லாத் தெரிஞ்ச ஆளும் இதுக்க இருக்க வேணும். இல்லாட்டா பிளையின்ரை விபரங்கள் என்னெண்டு போகும்....?''

''எல்லாத்தையும் அறிய இருந்த துருப்புச் சீட்டும் இப்ப இல்லாமப் போட்டுது....''

''அண்ணை...! கொஞ்சம் ஆறப் போடுங்கோ.. பெடியன் ஆருக்கோ என்னத்தையோ சொல்லிப்போடும் எண்டும் அவனைப் போட்டிருக்கலாம்.... அப்ப அவங்கள் எல்லாரையும் 'நோட்' பண்ணுறாங்கள் எண்டு அர்த்தம். நாங்கள் செத்த வீட்டடியில நிண்டதையும் ஆரும் படம் எடுத்திருக்கலாம். இப்பகலா பாதுகாப்பாகத்தானே இருக்கிறா...? நீங்கள் சாதாரணமா இருங்கோ.... அவங்கள் ஆராக இருந்தாலும் சந்தேகம் வரப்படாது...''

டானியல் அண்ணரும் அதனை ஏற்றுக்கொண்டார். பலதும் பத்துமாக பிரச்சனைகளை அலசிவிட்டு ஆனந்தன் வீடு வந்து சேர நள்ளிரவாகிவிட்டது.

பதைப்புடன் காத்திருந்த சாந்திக்கு அவனைக் கண்டதும்தான் மூச்சு வந்தது.

''இவ்வளவு நேரமும் வெண்ணிலா முழிச்சருந்தவள். இப்பதான் படுக்கப் போனது.... ஊர் உத்தியோகத்துக்கு ஒரு நேர காலம் இல்லையே அப்பா....? வாங்கோ சாப்பிட....'' வழக்கத்துக்கு மாறாக சாந்தி கடிந்து கொண்டாள்.

அவனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம்தான் காரணம் என்று அவனுக்கும் தெரியும்.

''பள்ளிக்குடப் பெடியன் ஒண்டு தூங்கிச் செத்திட்டுதாம்..! கேள்விப்பட்டனீங்களே....? சாப்பிடும்போது தகவல் சொன்னாள் சாந்தி. கதைகள் எவ்வளவு விரைவாகப் பரவுகின்றன. வீட்டுக்குள் இருக்கும் சாந்தியின் காதுகளுக்கும் எட்டி விட்டனவே.

வலிகாமத்தில் இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை மக்கள் துப்பரவு செய்ய ஆரம்பித்துவிட்டனர். தெரிந்த ஒருவர் ஆனந்தனையும் வேலைக்கு அழைத்திருந்தார். குறைந்தது ஒரு கிழமைக்காவது வேலை இருக்கும். விலைவாசி உயர்வாலும், சரியான வேலை கிடைக்காததாலும் திண்டாடிக் கொண்டிருந்த ஆனந்தனுக்கு அது ஒரு மகிழ்ச்சியான தகவல்தான்.ஒரு கிழமைக்கு அடுப்பு எரியும்.

''காலையில் வெள்ளென மண்டிக்காரரின் 'டெலிவரி'யை முடித்துவிட்டு சைக்கிளைக் கொஞ்சம் ஊண்டி உழக்கினால் வேலைக்குப் போய்விடலாம்...''

அசதியுடன் பாயில் சாய்ந்தான் ஆனந்தன்.

கோழி கூவியது....

**தொடரும்....**



# நினைவுகள் அழியாது



இந்த இளைஞன்
மக்களை நேசித்தவன்!
மண்ணின்மீது
தீராக் காதல் கொண்டவன்!!

விரும்பிய தெல்லாம்
கைகூட வேண்டும்
வசதிகள் வாய்ப்புகள்
வாழ்க்கையில்
நிரந்தரமாய் வேண்டும்
வரமாய்க் கேட்டும்
வாலிப வயதில்
விடுதலையை
விரும்பிக் கேட்டவன்!!

வாலிப வயதுக் காதல்
இவனுள்ளும் இருந்தது
இவன் காதலெல்லாம்
தாய்மடி மீது!!

மாணவர் போராட்டங்களை
முன்னின்று நடத்தியவன்
விடுதலை வித்தை
முதலில் விதைத்தவன்
ஆலகால விடம் அருந்தி
வரலாறு எழுத
வழிகாட்டி ஆகினான்!!

இவன் வழியேகி
பல்லாயிரம் வித்துக்கள்
இம் மண்ணில்
புதைந்தன!!
மறுபடி மறுபடி
முளைத்தன துளிர்த்தன!!

விடுதலை வேட்கையின்
ஆரம்பப் புள்ளி இவன்!
சிவகுமாரன் எனும் நாமம்
தரணி உள்ளவரை
தாயகத்தில் வாழும்!
இருபத்து மூன்று வயதில்
விழுதாகினான்.!
ஆண்டுகள் உருண்டு
நாற்பத்தொன்பதாகின
இன்னமும் உன் நினைவைச்
சுமக்கிறோம் நாம்!!

**(தியாகி பொன் சிவகுமாரன் நினைவாக 05/06/23 அன்று எழுதப்பட்டது)**

**கார்த்திகை**













# கதிர்காம கந்தனை நோக்கிய யாத்திரை









